பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 06 செவ்வாய்க்கிழமை 20.03.2018 கதிர் 135

## பாகிஸ்தான் செல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 20
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருநாள் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை பாகிஸ்தானுக்குச் செல்கின்றார்.

பக்கம் 04

# ஜனாதிபதிக்கு யாழில் கடும் எதிர்ப்பு







(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மார்ச் 20
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நேற்றைய யாழ். வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் காணாமற் போனோரின் உறவினர்களும் சென். பற்றிக்ஸ் கல்

பக்கம் 18

# தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு சர்வதேசமும் போற்றும் தலைவராகுங்கள்!

## மைத்திரியிடம் யாழில் சம்பந்தன் வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 20

"நீங்கள் இந்த நாட்டின் ஒரு தலைவராக மட்டுமல்லாமல், அதையும் தாண்டி முழு உலகிலும் மதிக்கப்படும் ஒரு தலைவராக உயரவேண்டும். தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட ஒரு தேசத் தலைவராகச் சர்வதேச சமூகம் உங்களை அங்கீகரித்து மகிழும் நிலைமை வரவேண்டும்."

- இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

பக்கம் 03



## தமிழ் மக்கள் செய்நன்றியை நான் மறந்துவிடமாட்டேன்!

### சென். பற்றிக்ஸ் கல்லூரி நிகழ்வில் மைத்திரி

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மார்ச் 20
வடக்கு மக்கள் எனக்கு அளித்த ஆதரவைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும், வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரனும் இங்கு குறிப்பிட்டிருந்தனர். அந்தச் செய்நன்றியை மறவாத காரணத்தாலேயே நான் வடக்

பக்கம் 18



### இனிது ரகசியம் அல்ல!

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனும், வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் நேற்று யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்

பக்கம் 03

## உச்சக் கட்டப் பாதுகாப்புடன் நேற்று யாழ். வந்தார் மைத்திரி

### சென். பற்றிக்ஸ் கல்லூரியில் தொழில்நுட்ப மையம் திறப்பு



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மார்ச் 20
கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் உச்சக்கட்டப் பாதுகாப்புடன் நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட

பக்கம் 04

## காணாமற்போனவர்கள் பற்றி அதிகம் பேசத் தேவையில்லை

### யாழில் கூறினார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், மார்ச் 20
காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து அவர்களின் உறவு

பக்கம் 04

## கொழும்பில் நேற்றுச் சூடு; காரில் சென்ற ஒருவர் சாவு

### அவரது மனைவி படுகாயம்

கொழும்பு, மார்ச் 20
கொழும்பு - மெஸேன்ஜர் வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் காரில் சென்ற இருவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் பலியாகியுள்ளார்.
துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த இருவ

பக்கம் 18

## ஜெனீவா பக்க அமர்வை குழப்பிய சரத் வீரசேகர!



ஜெனீவா, மார்ச் 20
ஐ.நா. மனித உரிமை கள்சபையின்வளாகத்தில் 'இலங்கை மனித உரிமை நிலைமையில் ஐ.நா.வின் மீளாய்வு' என்ற தலைப்பில் நேற்று இடம்பெற்ற பக்க நிகழ்வில் பங்கேற்றிருந்த கோட்டாபயவின் எலிய (வெளிச்சம்) அமைப்பினர் குழப்பம்

பக்கம் 04

## ரயிலுடன் மோதுண்டு வயோதிபர் உயிரிழப்பு



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மார்ச் 20
அரியாலை - முள்ளிப் பிரதேசத்தில் ரயிலுடன் மோதுண்டு வயோதிபர் ஒருவர் உடல் சிதறிப்

பக்கம் 18

## காணாமற்போனோரின் உறவுகளால் தமிழரசுவின் அலுவலகம் முற்றுகை!

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மார்ச் 20
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நேற்றுப் பிற்பகல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.
பல்வேறு நிகழ்வு

பக்கம் 18



# அமைச்சர்கள் கபீர், மலிக் சமரவிக்ரமவை பதவியில் இருந்து நீக்குமாறு அழுத்தம்

கொழும்பு, மார்ச் 20

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமானவர் எனக் கூறப்படும் அமைச்சர் மலிக் சமரவிக்ரமவை ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து நீக்குமாறு அந்த கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் கட்சியின் மறுசீரமைப்புத் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனித்தனியாகவும், குழுவாகவும் அழைத்து கருத்துக்களைக் கேட்டபோது, பிரதமர் அமைச்சர்களாக நியமித்துள்ள சிலர் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

டி.எம். சுவாமிநாதன், திலக் மாரப்பன, மலிக் சமரவிக்ரம ஆகிய அமைச்சர்களையே நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமர்சித்துள்ளனர்.





அதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கட்சியை விட்டு விலகிய பின்னர், பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட அமைச்சர் கபீர் ஹாசிம், கட்சிக்கோ, கட்சியினருக்கோ உரிய சேவைகளை ஆற்றவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கட்சியின் தவிசாளர் மற்றும் பொதுச்செயலாளர் பதவிகளுக்கு அமைச்சர்கள் அல்லாதவர்களை நியமிக்குமாறும் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் , ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

## புதிய உள்ளூராட்சி மன்றங்களை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 20

உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களை அமைக்கும் பணி இன்று முதல் ஆரம்பமாகும் என்று மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சின் செயலாளர் கமல்பத்மஸ்ரீ கருத்துத் தெரிவிக்கையில்–

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை அமைப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, ஏதேனும் ஒரு கட்சிக்கு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடியாத உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை நிலைநிறுத்தும் முறை குறித்தும் அமைச்சின் செயலாளர் தெளிவுபடுத்தினார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

24 மாவட்டங்களுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் வர்த்தமானியில் முழுமையாக வெளியிடுவதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன. இம் முறை உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மூலம் மன்றங்களை பிரதிநிதித்துவப்படுத்தி பெண்களும் தெரிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## வவுனியா இளைஞன் தவறான முடிவு!



வவுனியா, மார்ச் 20

வவுனியாவில் இளைஞன் ஒருவர் கழுத்தறுத்து தற்கொலை செய்து கொண்டுள்ளார் என பண்டாரிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா, பண்டாரிக்குளம், மில் வீதி பகுதியில் வசித்து வந்த இளைஞர் ஒருவர் கத்தியால் தனது கழுத்தை அறுத்து தற்கொலைசெய்து கொண்டுள்ளார்.

கடந்த மூன்று தினங்களாக குழப்ப நிலையில் இருந்த இந்த இளைஞர்நேற்று தனது கழுத்தை கத்தியால் அறுத்துள்ளார்.

உடனடியாகவே வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் உயிரிழந்துள்ளார்.

36 வயதுடைய சி.தங்கரூபன் என்ற இளைஞரே அவ்வாறு உயிரிழந்தவராவார். இது தொடர்பான விசாரணைகளை பண்டாரிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காதல் விவகாரமே இந்தத் தற்கொலைக்கு காரணம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (க-100)

# உடையார்கட்டுக் குளத்தில் இருந்து படையினரின் பயன்பாட்டுக்காக நீர்!




முல்லைத்தீவு, மார்ச் 20

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள உடையார்கட்டுக் குளத்தில் இருந்து படையினரின் முகாம் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு நீர் எடுத்துச் செல்லப்படுகிறது.

இது சட்டத்துக்கு முரணானதும் மக்களுக்கு குறிப்பாக விவசாயிகள் நன்னீர் மீன்பிடி தொழிலாளிகளுக்கு பாதிப்பானது.

எனவே, இதை உடனடியாக நிறுத்துமாறு கடந்த புதுக்குடியிருப்பு அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து நீரைப் பெறுவதை நிறுத்தி உபகரணங்களை அகற்ற உத்தரவிடப்பட்டது. இதற்கு இராணுவத்தினரும் சம்மதமும் வழங்கியிருந்தனர்.

இருப்பினும் இதுவரை அவை அகற்றப்படவில்லை. இதனால், அபிவிருத்திக் குழுவில் உறுதியளித்தீர்மானத்தை நிறைவேற்றாது இராணுவம் உதாசீனம் செய்துள்ளது.

முல்லைத்தீவு, முத்து ஐயன் கட்டுநீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள உடையார்கட்டுக் குளத்தில் படையினர் தமது தோட்டச் செய்கைகளுக்காக மூன்றுக்கு மேற்பட்ட பெரிய நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி குளத்தின் நீரை எடுத்து வருகின்றனர்.

இதனால், குளத்தின் நீர் மட்டம் மிக வேகமாகக் குறைவடைவதுடன், இந்த ஆண்டு முழுமையான சிறுபோகச் செய்கை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்படுமென விவசாயிகளால் பல தரப்பினரிடமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, இது தொடர்பில் கடந்த 26 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் அதனைத் தொடர்ந்து கடந்த 12 ஆம் திகதி புதுக் குடியிருப்பு பிரதேச செயலகத் தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது விவசாயிகளால் குளத்தில் இராணுவத்தினர் நீர் எடுப்பதால் எமது விவசாயச்செய்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, குளத்தில் உள்ள இயந்திரங்களை அகற்றி விவசாயத்தை உரிய முறையில் செய்ய அனுமதிக்குமாறு கோரப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண விவசாய அமைச்சர்,க சிவநேசன்–

இந்தக் குளத்தில் நெற்செய்கைக்காக மட்டுமே இம்முறை அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும் வேறு தேவைக்காக நீர் எடுக்க முடியாது. நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள மேற்படி குளத்திலிருந்து இயந்திரங்கள் மூலம்நீரை எடுப்பது சட்டவிரோதமானது. இதனை நிறுத்தவேண்டும். வறட்சி காரணமாக இம் முறை உரிய முறையில் இங்கு நெற்செய்கை இடம்பெறாவிட்டில் விதை நெல்லுக்குத் தட்டுப்பாடுஏற்படவாய்ப்புள்ளது எனத் தெரிவித்தார்.

இந்தக் குளத்தின் வரலாறுகளை சுட்டிக்காட்டி விவசாயி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் –

இடப்பெயர்வுக்குப் பின் ஒரு தடவை மாத்திரமே முழுமையாகநெற்செய்கைமேற்கொண்டோம். இந்தக் குளத்துக்கு வரும் நீரையும் இராணுவத்தினர் மறிக்கின்றனர். இதனால், நீர் வரத்து குறைந்துள்ளது. இதனாலேயே தொடர்ச்சியா இந்த இயந்திரங்களை அகற்றி சட்ட பூர்வநடவடிக்கைஎடுக்கக்கோருகிறோம் எனத் தெரிவித்தார்.

பல்வேறு கருத்துக்களின் பின்னர் இந்த நடவடிக்கை சட்ட விரோதநடவடிக்கையை நிறுத்த வண்டும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர்,க சிவநேசன் அழுத்தமாக தெரிவித்தார். இதை தொடர்ந்து இது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு இராணுவத்துக்கு தெரிவிக்கப்பட்டது இதற்கு இராணுவ தரப்பு சம்மதமும் தெரிவித்தது.

இறுதியாக வடமாகாண பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன் இந்தத் தீர்மானம் உரிய முறையில் நடைமுறைப் படுத்த வேண்டும் எனவும்

நீர்ப்பாசன பொறியியலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் இவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டு மெனவும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில், இதுவரை இயந்திரங்கள் அகற்றப்படவில்லை இன்றும் நீர் குளத்திலிருந்து எடுக்கப்படுகிறது. இதனால், அபிவிருத்திக் குழுவில் உறுதியளித்த தீர்மானத்தை நிறைவேற்றாது இராணுவம் உதாசீனம் செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (க-81)

# ஆஸி. அரசால் இலங்கை கடற்படைக் கப்பலுக்கு புதிய இரு இயந்திரங்கள்!

கொழும்பு, மார்ச் 20

ஆஸ்திரேலிய அரசால் இலங்கை கடற்படை கப்பலுக்கான புதிய இரண்டு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய இயந்திரங்கள் இரண்டையும் கடற்படை அதிகாரிகளின் பிரதி அதிகாரி மற்றும் கடற்படை நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர், ரியர் எட்மிரல் பியால் டீசில்வாவிடம், இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் ப்ரைசீ ஹட்சன் வழங்கினார்.

காலியிலுள்ள தக்ஷின கடற்படைக் கப்பல் தளத்தில் இந்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்த இயந்திரங்களை கடற்படை கப்பல் 'மிஹிகாதா' விற்கு பொருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட கடற்படை அதிகாரிகள் உட்பட தென்பிராந்திய கடற்படைத் தளபதி, ரியர் எட்மிரல் கபில சமரவீரா மற்றும் ஆஸ்திரேலிய தூதரக அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (க)



# போர்க் குற்றவாளிகளை பாதுகாக்கும் அரசு

## கஜேந்திரகுமார் ஜெனீவாவில் சீற்றம்

ஜெனீவா, மார்ச் 20

யுத்தக் குற்றங்களில் இருந்து முன்னைய அரசையும், அரசுத் தலைவர்களையும் பாதுகாத்தவர்கள் தாங்களே என்று ஜனாதிபதியும் பிரதமரும் இந்தத் தேர்தல் காலங்களில் கூறிவந்தனர். இவ்வாறானவர்களிடம் இருந்து பொறுப்புக்கூறலை எதிர்பார்க்க முடியாது. எனவே இலங்கை விடயத்தை சர்வதேச நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

– இவ்வாறு நேற்று ஜெனீவாவில் கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான பூகோளக் காலக் கிரம மீளாய்வு விவாதம் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியவை வருமாறு:–

மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானம் மூலம் தான் அளித்த உறுதிமொழியைச் செயற்படுத்துவதற்காக நிலைமாறு கால நீதிப் பொறிமுறை ஒன்றை இலங்கை ஏற்படுத்த வேண்டும் என்று 2017 நவம்பர் பூகோளக் காலக்கிரம மீளாய்வின் போதே பல அங்கத்துவ நாடுகள் வற்புறுத் தின.

முப்பது மாதங்கள் கடந்த நிலையில் காணாமற்போனோருக்கான அலுவலகம் இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் இயங்கக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதைக் கூட, அவற்றுக்கு நியமிக்கப்பட்ட ஆணையாளர்களின் நம்பகத்தன்மை பற்றிய சந்தேகங்கள், அதற்கு வழக்குத் தொடுப்பதற்கான அதிகாரமில்லாமை, எந்த முன்னேற்றமும் இல்லாதபோக்கு ஆகியவை காரணமாக காணாமற்போனோரின் உறவினர்கள் அதனை அடியோடு நிராகரித்து விட்டனர்.

குறிப்பாக, மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டமீறல்கள் விடயத்தில் பொறுப்புக்கூறலோ, குற்றவழக்குகளோ இடம்பெறப்போவதில்லை. ஏனென்றால் அப்படி ஏதும் நடக்கவேயில்லை என்று ஜனாதிபதியும் பிரதமரும் திரும்பத் திரும்பக் கூறியிருக்கின்றனர்.

உண்மையில், அண்மைய தேர்தல் காலத்தில் தங்களைப் பெரிதும் உயர்த்திக் காட்டுவதற்காக, முன்னைய அரசுத் தலைவர்களையும், படைஉறுப்பினர்களையும் போர்க் குற்ற விசாரணைகளில் இருந்து காப்பாற்றியது தங்களின் அரசே என்று இவர்கள் (ஜனாதிபதியும், பிரதமரும், மீண்டும் மீண்டும் கூறி வந்தனர்.

பூகோளக் காலக்கிரம மீளாய்வுகளின் போது – குறிப்பாக பொறுப்புக்கூறல் மற்றும் கிரிமினல் குற்றவழக்குகள் தொடுத்தல் குறித்து அரசு காட்டி வரும் ஈடுபாடும் உறுதிப்பாடும் வெறும் கண்துடைப்பும் நல்லுறவு நாடகமும் தான்.

ஆகவே, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் சட்டத்துக்கு அமைவாகத் தன்னைத் தானாகவே முன் வந்து உட்படுத்தும்படி இலங்கையை வலியுறுத்துவது அங்கத்துவ நாடுகளின் கடமை. அதேசமயம் இலங்கை விடயத்தை சர்வதேச நீதிமன்றத்திடம் ஒப்படைப்பது அல்லது விசேட குற்றவியல் நீதிமன்றம் அமைத்து அதனிடம் கையளிப்பது பற்றிய வாய்ப்புக் குறித்தும் அவை பரிசீலிக்க வேண்டும் – என்றார்.

## தேசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் தொழில்நுட்ப ஆய்வுகூட மையத்தின் திறப்புவிழா யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நேற்று நடத்தது. இதில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டு ஆய்வுகூட மையத்தைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றும் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இங்கு சில வார்த்தைகள் பேசக் கிடைத்தமை குறித்து மகிழ்கிறேன்.

இந்த நிகழ்வில் தமிழில் பேசத்தான் விரும்புகிறேன். ஆனால் இங்குள்ள – பொறுப்பானவர்களில் பலருக்கு நான் தமிழில் பேசினால் அது விளங்காது என்பதனால் முடிவை மாற்றி, ஆங்கிலத்தில் உரையாற்றுகிறேன்.

நான் இந்த சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் என்று இங்கு குறிப்பிடப்பட்டது. அது உண்மை. அதற்காக நான் பெருமிதம் கொள்கிறேன்.

வண.பிதா லோங் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில் – 1942 முதல் 1945 வரை – நான் இந்தக் கல்லூரியில் கல்வி கற்றேன். அவர் ஓர் ஐரிஷ்காரர்.

அவர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபராக இருந்த போது இடம்பெற்ற சம்பவம் ஒன்று எனக்கு நினைவுக்கு வருகின்றது. அது என்னுடன் தொடர்புபட்டது. ஒரு மண்டபத்தில் நான் ஒரு நிகழ்வில் இருந்தேன். அது ஒரு பெரிய கதிரை. நான் சிறிய பையன் அதில் அமர்ந்திருந்தேன். அப்பக்கத்தினால் சென்றுகொண்டிருந்த லோங் அடிகள் என்னைப் பார்த்து “உமக்கு இந்தக் கதிரை மிகச் சிறியதாக இருக்கின்றது.” – என்றார்.

இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் மிக முக்கியமான ஒரு விடயத்தை – கர்தினால் மல்கம் ரஞ்சித் இங்கு குறிப்பிட்டுத் தொட்டுச் சென்ற ஓர் அம்சத்தை – நான் இங்கு விவரிக்க விரும்புகிறேன்.

வெளிநாட்டு ஆளுகைக்குள் நாங்கள் வந்த சமயத்தில் இங்கு ஒரே நிலப்பரப்பில் வெவ்வேறு பகுதிகளில் நாங்கள் இருந்தோம். தமிழர்கள் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு கொண்டிருந்தார்கள். இன்னொரு பகுதியில் கரையோர சிங்கள மக்கள் ஆட்சி செய்தனர். பிறிதொரு பகுதியில் கண்டிச் சிங்க ளவர் ஆட்சி புரிந்தனர். முஸ்லிம் மக்கள் எல்லா இடத்திலும் வசித்த னர்.

வெளிநாட்டு ஆளுகைக்கு நாங்கள் வெவ்வேறு காலங்களில்தான் உட்பட்டோம். வெவ்வேறு வெளிநாட்டு ஆட்சியாளர்கள் அவர்கள். ஒரு வெளிநாட்டு ஆட்சியாளரினால் ஒரே சமயத்தில் நாங்கள் வெல்லப்படவில்லை. வித்தியாசமான காலத்தில் வித்தியாசமான ஆளுகையாளர்களால் நாங்கள் ஆக்கிரமிக்கப்பட்டோம்.

கடைசியாக நாங்கள் அனைவரும் 1815 இல் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தோம்.

பின்னர் 1833 இல் இந்த நாடு முதற் தடவையாக பிரிட்டிஷாரால் ஒன்றிணைக்கப்பட் டது. தங்களுடைய நிர்வாக வசதிக்காக அதனை அவர்கள் செய்தனர்.

அன்று முதல் சுதந்திரத்துக்காக நாங்கள் போராடினோம். 1948 இல் நாங்கள் சுதந்திரம் பெற்றோம். நாங்கள் சிங்கள மக்கள், தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்தே சுதந்திரத்திற்காகப் போராடினோம்.

சுதந்திரத்துக்கு முன்னர் – தமிழர்கள் பிரிவினையைக் கேட்கவில்லை சமஷ்டியைக் கோரவில்லை. சமச்சீரான பிரதிநிதித்துவத்தையே அவர்கள் கேட்டார்கள். ஆனால் அதுவும் வழங்கப்பட வில்லை. நாங்கள் ஒரே நாட்டுக்குள் வசிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

நாங்கள் அரசின் கட்டமைப்பு மாற்றப்பட வேண்டும் எனக் கோரினோம்.

பாரம்பரியமாக நாம் வாழும் எமது தாயகத்தில் நாங்கள் எங்களின் சமூக, கலாசார, பொருளாதார அபிலாஷைகளைப் பேணியபடி நாங்கள் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்கின்றோம் என உணரத்தக்க வகையில் அரசின் கட்டமைப்பு மாற்றப்பட வேண்டும் என நாம் கோரினோம்.

1972 ஆம் ஆண்டின் அரசமைப்பு உருவாக்கம் வரை நாம் இதற்காகப் போராடினோம்.

1972 ஆம் ஆண்டின் அரசமைப்பு தமிழ் மக்களின் ஆகக் குறைந்த கோரிக்கைகளைக் கூட உள்வாங்கவில்லை. அதன் பின்னர்தான் பிரிவினை கோர வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களிடம் நாம் இழந்த எமது இறைமையை மீளக் கோரி நிலை நிறுத்த வேண்டிய நிலைக்கு அப்போதுதான் தள்ளப்பட்டோம்.

அதன் பின்னர்தான் போர் ஆரம்பமானது. முப்பது ஆண்டுகள் அது நீடித்தது. அதில் இந்தியா சம்பந்தப்படும் நிலைமை வந்தது. சர்வதேச சமூகம் சம்பந்தப்படும் சூழல் ஏற்பட்டது. அந்தப் பங்களிப்பு இன்றும் தொடர்கின்றது.

இந்தப் பிரச்சினைக்கு எங்கள் சொந்த நாட்டின் கட்மைப்புக்குள் ஒரு தீர்வையே நாங்கள் வேண்டி நிற்கின்றோம். ஐக்கியமான, பிரிக்கப்படாத, பிரிக்கப்பட முடியாத ஸ்ரீலங்கா என்ற கட்டமைப்புக்குள் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம். இந்த நாட்டின் மக்கள் என்ற முறையில் தமிழர்களுக்கு தீர்வு அவசியம்.

2015 தேர்தலில் இந்த ஆணையின் அடிப்படையில் தான் ஜனாதிபதியாக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டீர்கள். அந்த இலக்கை நீங்கள் அடைவதற்காக தமிழர்கள் தங்களின் ஏக ஆதரவை உங்களுக்குத் தந்தார்கள்.

நீங்கள் அதைச் செய்ய விழைகின்றீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நீங்கள் அதைச் செய்ய விரும்புகின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். அதில் உங்களுக்கு இடைஞ்சல்கள், இடர்பாடுகளும் உள்ளன.

‘இந்த நாட்டின் பிரதான பிரச்சினைக்கு நான் தீர்வு கண்டேன்’ என்று கூறக்கூடிய ஒரு நாட்டுத் தலைவன் இங்கு உருவாகுவதைப் பார்க்க நாம் விரும்புகின்றோம். உங்களால் அது முடியும் என நாங்கள் நினைக்கிறோம். நீங்கள் செய்தாக வேண்டும். அது நடைபெறும் என்று நம்புகிறோம்.

இந்த நாடு இனியும் இப்படியே போக முடியாது. இந்த நாடு பாதிக்கப்பட்டது போதும்; இந்த நாடு இழந்தவை போதும்.

எங்களிலும் விட பொருளாதாரத்தில் எவ்வளவோ பின் தங்கி நின்ற பல நாடுகள் எங்களைத் தாண்டி முன்னேறி எவ்வளவோ வெகு தூரம் போய்விட்டன.

இந்த நாட்டின் எல்லா மக்களும் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ விரும்புகின்றனர்.

நாங்கள் சிங்கள மக்களைப் பெரிதும் மதிக்கின்றோம். உங்களைப் போன்ற சிங்கள மக்கள் ஒழுங்கமைவான, உயர்ந்த கண்ணியவான்கள்.

நாங்கள் ஒவ்வொரும் ஒன்றிணைந்து, ஒருவரை ஒருவர் மதித்து, அமைதியாகவும், மகிழ்வாகவும் வாழமுடியும்.

இந்த விடயத்தில் முன்னேறுவதற்குத் தடையாக உள்ள காரணிகளை எல்லாம் தாண்டி நீங்கள் முன்னேறிவர வேண்டும்.

நீங்கள் இந்த நாட்டின் ஒரு தலைவராக மட்டுமல்லாமல், அதையும் தாண்டி, முழு உலகிலும் மதிக்கப்படும் ஒரு தேசத்தலைவராக உயர வேண்டும். தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட ஒரு தேசத் தலைவராக சர்வதேச சமூகம் உங்களை அங்கீகரித்து மகிழும் நிலைமை வரவேண்டும்.

தமிழர்களின் தாயகத்தின் முக்கிய மையமான யாழ்ப்பாணத்தில், நான் கல்வி பயின்ற எனது பழைய பாடசாலை சென். பற்றிக்ஸில் நின்று கொண்டு, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்ற எங்கள் அனைவரதும் கோரிக்கையை எங்கள் மக்கள் சார்பிலும் உங்கள் முன் வைக்கிறேன். – என்றார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லூரி நிகழ்ச்சியில் சந்தித்துக் கொண்டனர்.

‘காலைக்கதிர்’ நாளிதழின் வெளியீட்டுக்கு முன்னோட்டமாக முதல்நாள் மாலை ‘விடியல் வீச்சு’ என்ற இதழ் வெளியானமை



*“இந்தச் சந்திப்பு எப்படி இருந்தது என்பது குறித்து உமது செய்தி மூலங்கள் ஏதேனும் தகவல் தந்திருக்குமே?”* – என்று நேற்று மாலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டார் எனது நண்பரான ஓர் அரசியல்வாதி.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் வருகின்றது, எந்தப் பக்கம் நிற்பது, யாருடன் அணி சேருவது, அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் தவிப்பில் இருக்கும் பிரமுகர் அவர்.

*“கொஞ்சம் பொறும். சம்பந்தன் – விக்கி சந்திப்புவிடயம், இப்போது எங்களுக்கும் ஒரு முக்கியமான விவகாரம். பொருந்தி வரும் நிகழ்வு. எப்படியும் நாளைக்கு ஏதேனும் உள் இரகசியம் தருவேன்”* – என்று நேற்றிரவு அவருக்குச் சொல்லி வைத்தேன்.

வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்த இதழை இணைப் பிரதம விருந்தினர்களாக வந்து வெளியிட்டு வைத்தவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும், முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனும்.

சரியாக அது நடந்து ஐந்நூறாவது ‘காலைக்கதிர் இதழை நீங்கள் இன்று வாசிக்கின்றீர்கள். அந்த ‘விடியல் வீச்சு’ மலரின் பின்னர் இன்றுடன் ஐந்நூறு நாள்கள் கடக்கின்றன.

அன்றைய நிகழ்வுக்கு இணைப் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு இருவருமே அரசியல் ரீதியில் ஒருவர் முதுகை மற்றவர் ‘சொறிந்து’ கொள்ளத் தவறவில்லை என்பேன்.

விக்னேஸ்வரன் முதல்வராகி சரியாக மூன்று வருடங்களின் பின்னர் அந்த நிகழ்வில் இருவரும் யாழ்ப்பாணத்தில் ஒரு மேடையில் ஏறியிருந்தனர்.

*“விக்கியை முதல்வராக்கியமை முற்றிலும் சரியானதுதான்; அவர் முன்னிலையில் சம்பந்தன் அறிவிப்பு”* – என்று சம்பந்தனின் உரையையும்–

*“தமிழ்க் கூட்டமைப்பை உடக்கவே மாட்டேன்.; சம்பந்தன் முன் விக்கி உறுதி”* – என்று முதல்வரின் பேச்சையும்–

வரிக்கு வரி அப்படியே முதலாவது ‘காலைக்கதிர்’ இதழில் பிரசுரித்திருந்தோம். வாசகர்களுக்கு அது நினைவில் இருக்கலாம்.

ஆனால் நேற்றைய சந்திப்பு அன்றைய அந்தச் சந்திப்பு போல அதிகம் சினேகபூர்வமாக அமையவில்லை என்கின்றன உள்வீட்டு வட்டாரங்கள்.

சென்.பற்றிக்ஸ் நிகழ்வுக்கு அழைக்கப்பட்ட விசேட பிரமுகர்கள் என்ற முறையில் ஜனாதிபதி வரும்வரை நேற்று ஓர் அறையில் அவர்கள் அமர வேண்டி நேர்ந்தது.

முதலில் சம்பந்தன், முதல்வர் விக்கி, யாழ். ஆயர் மூவர் மட்டுமே இருந்தனர். ஒன்றாக அமர்ந்தமையால் தங்களுக்குள் அவர்கள் பேச வேண்டியாயிற்று.

சம்பந்தன் தாம் பற்றிக்ஸில் கல்வி பயின்றமையைப் பற்றிக் கூறினார். தனது தந்தையார் இராஜவரோதயம் தன்னைக் கல்லூரிக்குக் கூட்டி வந்து சேர்த்தமை பற்றி பிரஸ்தாபித்தார். அப்போது முதல்வர் விக்னேஸ்வரனின் தந்தையும் தனது தந்தையும் மிக நெருங்கிய நண்பர்கள் என்று குறிப்பிட்டு அந்த நட்புப் பற்றிய விடயங்களை சிலாகித்தார் சம்பந்தன். யாழ். ஆயர் அதனைக் கேட்டுக் கொண்டிருந்தார். அச்சமயம் மாவை சேனாதிராசா அங்கு வந்தார். தானும் மாவையும் நீண்ட நாள்களாக மிக நெருங்கிய நண்பர்கள் என்றும், இது பலருக்கும் வெளியில் தெரியாது என்றும் சொன்னார் ஆயர்.

அப்படிப் பேசிக் கொண்டிருக்கையில் ஜனாதிபதி வந்து சேர்ந்தார். அத்தோடு அந்த உரையாடல் முடிந்தது.

பின்னர் மேடையில் பேசும் போது மேடையில் இருந்த எல்லோரையும் பெயர் சொல்லி, அடைமொழி குறிப்பிட்டு விளித்தார் சம்பந்தன். *‘இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், யாழ்ப்பாணத்தின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா அவர்களே!* என்றெல்லாம் குறிப்பிட்ட சம்பந்தன், முதலமைச்சர் விக்கியை மட்டும் வெறுமனே – மொட்டையாக – *‘வடக்கு முதலமைச்சரே!’* என்று மட்டும் விளித்தார்.

அவர் அப்படி விளித்த விதமே முதல்வர் தொடர்பில் சம்பந்தனின் தற்போதைய நிலைப்பாட்டை அம்பலப்படுத்தும் ஒரு சமிக்ஞை என்கின்றன உள்வீட்டு வட்டாரங்கள்.

-மின்னல்-

# கண்டியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கும் பணி ஆரம்பமானது

கண்டிப் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டது.

இதுதொடர்பான நிகழ்வு கண்டி மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது குண்டசாலை, ஹாரிஸ்பத்துவ, பூஜாப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 136 பேருக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டன.

சிறிய நடுத்தர பூரண அடிப்படைகளில் சொத்துக்களுக்கான இழப்பீடுகள் வழங்கப் படுகின்றன.

உயிர்ச் சேதங்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய 5 லட்சம் ரூபா வழங்கப்படுவதோடு, முதல் கட்டமாக ஒரு லட்சம் ரூபா நேற்று வழங்கப்பட்டது.

அமைச்சர் அப்துல் ஹலீம், இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உட்படப் பல பிரமுகர்களும் இதில் கலந்துகொண்டார்கள்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## யாழ்ப்பாணத்தில் சம்பந்தனின் இரண்டு வேறுபட்ட உரைகள்

யாழ்ப்பாணத்துக்கு வந்த - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் - இரண்டு முக்கிய கூட்டங்களில் பங்குபற்றினார்.

இரண்டிலும் வெவ்வேறு விதமான சாணக்கியயமான தந்திர உரை களை அவர் ஆற்றிச் சென்றிருக்கின்றார். தமது அரசியல் அனு பவத்தை - மேதாவிலாசத்தை அவர் - காட்டிச் சென்றிருக்கின்றார் என்றும் கூறலாம்.

ஒன்று - முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான தளபதி அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் சிலையைச் சுழிபுரத்தில் திறக்கும் நிகழ்வு.

மற்றையது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குபற்றிய - சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் தொழில்நுட்ப கல்விக் கூடக் கட்டடத் திறப்பு விழா.

இரண்டிலுமே பங்குபற்றிய தலைவர்கள், தரப்புகள், பொது மக்கள் வெவ்வேறானவர்கள்; வெவ்வேறு திறத்தினர்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தாம் தலைமை தாங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் பின்னடைவைச் சந்தித்த பின்புலத்தில், தமது கட்சி ஆதரவாளர்களை யாழ்ப்பாண மண்ணில் சம்பந்தன் சந்திக்கும் முதல் நிகழ்வு அமிர்தலிங்கத்தின் சிலை திறப்பு விழாக் கூட்டம்.

கட்சியின் வீழ்ச்சியை மாற்றி எழுத வைக்கும் ஒரு முயற்சிக்கு அவர் 'பிள்ளையார் சுழி' போட வேண்டிய தளம் - களம் - அது. அந்த வேலையை - பணியை - அவர் கனகச்சிதமாக முன்நகர்த்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

அதற்கு அவருக்குக் கைகொடுத்தவர் புலிகளின் மதியுரைஞராக இருந்த அன்ரன் பாலசிங்கம் என்று கூறலாம்.

"ஒன்றுபட்ட இலங்கைக்குள் இணக்கமான தீர்வு ஒன்றை கொழும்பு அரசுடன் பேசித் தீர்க்க இணங்கி விட்டீர்களே...! அப்படியானால் 'தனித் தமிழீழம்' என்ற கொள்கையைக் கைவிட்டு விட்டீர்களா?" - என்ற வினா தொடுக்கப்பட்ட காலத்தில், அதற்குத் தத்துவார்த்த ரீதியாகப் பதிலளித்தார் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

'உள்ளக சுயநிர்ணய உரிமை', 'வெளிப்புற சுயநிர்ணய உரிமை' என்ற சொற்பதங்களும் விளக்கங்களும் அப்போதுதான் தமிழ் மக்களுக்குக் கொள்கை ரீதியாக விளக்கமளிக்கப்பட்டன; எடுத்துரைக்கப்பட்டன.

அந்த விளக்கத்தையே சம்பந்தனும் சுழிபுரத்தில் - தமது கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் - முன்வைத்தார்.

"வெளிப்புற சுயநிர்ணயம் கோரவும் தமிழ் மக்கள் உரித்துடையவர்கள். இதனை சர்வதேசத்திடமும் ஏற்கனவே சொல்லி விட்டோம்." - என்றுரைத்தமையின் மூலம், ஒரு செய்தியைத் தனது யாழ். மக்களுக்குச் சொல்லாமல் சொன்னார் இரா.சம்பந்தன்.

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுக்காக இணங்கி - இறங்கி - வந்து நிற்கின்றோம். அதற்கு வாய்ப்பளித்து, சந்தர்ப்பம் தந்து, விட்டுக் கொடுத்துக் காத்திருக்கின்றோம். அந்த சமாதான சமிக்ஞையை தென்னிலங்கை சரியாகப் பயன்படுத்தி கைபற்றிக் கொள்ளாவிட்டால் பிரிந்து செல்லும் உரிமையையும் நாம் கோரி, களத்தில் இறங்குவோம். அதற்குப் பின் நிற்க மாட்டோம். - என்பதுதான் சம்பந்தன் கூறாமற்கூற விழைந்த செய்தி.

தேர்தல் தோல்வியில் துவண்டு கிடக்கும் தமது தமிழரசுக் கட்சி உட்பட்ட தமிழ்க் கூட்டமைப்பைத் தூக்கி நிறுத்தவும் -

தமிழ் மக்கள் மத்தியில் வீழ்ச்சியடைந்திருக்கும் தமது கட்சியின் ஆதரவுத் தளத்தைச் சீர்செய்து, மீண்டும் போராட்ட முழக்கத்துடன் தங்களது அரசியல் காய்நகர்த்தல்களை வெற்றிகரமாக நகர்த்தவும் -

இந்த போர்ப் பிரகடனத்துக்கான முன்னறிவிப்பு போதுமானது என்று சம்பந்தன் கருதியிருப்பார் போலும்..!

போதாக் குறைக்கு எமக்குப் பின்னால் ஓர் உலக வல்லரசு ஒன்று உண்டு என்றும், அதேபோன்று எங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற கரிசனையில் பிராந்திய வல்லரசு ஒன்று உறுதியாக உள்ளது என்றும் அறிவித்தமை மூலம், நாங்கள் இன்னும் எமது நிலைப்பாட்டில் பலமாகவே உள்ளோம், துவண்டு விடவில்லை, துவண்டு விடத் தேவையில்லை என்ற செய்தியையும் தமது தரப்பினருக்கு சம்பந்தன் செவ்வனே எடுத்துரைத்திருக்கின்றார் என்றே கருதவேண்டும்.

ஆனால், அடுத்த நாள் - நேற்று - ஜனாதிபதி பங்கு பற்றிய சென். பற்றிக்ஸ் நிகழ்வில் இந்த வீராவேசம், வீறாப்பு எல்லாம் இல்லாமல், தந்திரோபாயப் பேச்சு ஒன்றை ஆற்றியிருக்கின்றார் அவர்.

"தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நீங்கள் விரும்புகின்றீர்கள் - விழைகின்றீர்கள் - என நாம் நம்புகின்றோம். ஆனால் இடர்பாடுகள், இடைஞ்சல்கள்தாம் உங்களைத் தடுக்கின்றன. அவற்றை மீறி வந்து, நீங்கள் செய்ய வேண்டும்." - என்று வலு பவ்வியமாக, கமுக்கமாக ஜனாதிபதியைக் கோரியிருக்கின்றார் சம்பந்தன்.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட போக்கிலான பேச்சுகள் மூலம் தமது சாணக்கியத்தைக் காட்டிச் சென்றிருக்கின்றார் மூத்த தமிழ்த் தலைவரான இரா.சம்பந்தன்.

### ஜெனீவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தினர். அந்த அமைப்பின் தலைவரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர, சர்ச்சையை ஏற்படுத்தியதால் இந்தக் கூட்டம் இடை நடுவில் முடிவுறுத்தப்பட்டது.

இந்தப் பக்க நிகழ்வுக்குச் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதியும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான போல் நியூமன் தலைமை தாங்கினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், வடக்கு மாகாண அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் யாழ்ப்பாணத்தில் செயற்படும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், கோட்டாபய ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட எலிய (வெளிச்சம்) அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் முதலில் மனித உரிமைச் செயற்பாட்டாளர் மணிவண்ணன் உரையாற்றினார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து ஆராயக் காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த விதமான நம்பிக்கையும் இல்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஜனாதிபதியை யும் பொலிஸ் மா அதிபரையும் சந்தித்தும் எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.

அரசியல் தீர்வும் கிடைக்காத நிலைமையே காணப்படுகின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டமும் இன்னமும் நீக்கப்படவில்லை. காணிகளும் விடுவிக்கப்படவில்லை.

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த பரணகம குழுவிடம் 24 ஆயிரம் முறைப்பாடுகள் உள்ளன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் 16 ஆயிரம் முறைப்பாடுகள் உள்ளன. மனித உரிமை ஆணைக்குழுவிடமும் முறைப்பாடுகள் உள்ளன.

இந்த நிலையில் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என நாம் நம்பவில்லை என்று மனித உரிமைச் செயற்பாட்டாளர் மணிவண்ணன் தெரிவித்தார்.

ஜனாதிபதி இன்று (நேற்று) யாழ்ப்பாணம் சென்றிருக்கின்றார். அவர் அங்கு சென்ற போது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். அந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஒரு சிலர் ஜனாதிபதியை சந்திக்கச் சந்தர்ப்பம் கேட்டும் அவர் மறுத்துவிட்டார். எனவே இங்கு நீதியை எதிர்பார்க்க முடியாது என்று அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் எடுத்துரைத்தார்.

இதனையடுத்து எலிய அமைப்பின் தலைவர் சரத் வீரசேகர உரையாற்றினார்.

காணாமற்போனோர் தொடர்பில் அனைவரும் இராணுவத்தையே குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் புலிகள் எந்தளவான மனித உரிமை மீறல்களைச் செய்தனர். சிறுவர்கள் கடத்தப்பட்டு ஆயுதப் படைக்கு ஆள்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

புலிகள் கொலைகளைச் செய்தனர். ஆனால் இராணுவம் மனித உயிர்களைக் காப்பாற்றியது என்றார் வீரசேகர.

புலிகள் சிறுவர்களைக் கடத்தியமை தொடர்பில் நீங்கள் அறிவீர்களா? என்று கூட்டத்தைத் தலைமை தாங்கிய போல் நியூமனிடம் வீரசேகர கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கான பதிலை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழங்குவார் எனப் போல் நியூமன் தெரிவித்தார்.

இதனையடுத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விடுதலைப் புலிகள் சிறுவர்களை ஆள்சேர்த்தமை தொடர்பில் ஐ.நா.வுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டன என்று குறிப்பிட்டதுடன் அது தொடர்பில் விளக்கமொன்றை அளித்தார்.

இதன்போது மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்திய சரத் வீரசேகர, தான் இந்தக் கேள்வியைக் கூட்டத்தை நடத்திய போல் நியூமனிடமே கேட்டதாகவும், அதற்குக் கஜேந்திரகுமார் எவ்வாறு விளக்கமளிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாறு பக்கச் சார்பான முறையில் போல் நியூமன் கூட்டத்தை நடத்த முடியுமா? என்றும் கேள்வி எழுப்பினார்.

நான் எனது கடமையைச் செய்கின்றேன். நீங்கள் அதில் தலையிட வேண்டாம் என்று போல் நியூமன் பதிலளித்தார்.

இதனையடுத்து போல் நியூமனுக்கும் சரத் வீரசேகர தலைமையிலான அமைப்பினருக்கும் முரண்பாடு ஏற்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமை தொடர்பில் விளக்கமளிக்க முயன்றார். எனினும் சரத் வீரசேகர போல் நியூமனுடன் முரண்பட்டதால் கூட்டம் முரண்பாடுகளுடன் நிறைவடைந்தது. (ஐ)

### காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க காணாமற் போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. அது தனது கடமைகளை முன்னெடுத்துள்ளது. அதனால் காணாமற்போனோரின் உறவினர்களின் கோரிக்கைகள் பற்றி நான் அதிகம் பேசத் தேவையில்லை

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூட மையத்தைத் திறந்து வைத்த பின் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பதிலைக் கோரி சென். பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக காணாமற்போனோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (ஐ –7)

### உச்சக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்நுட்ப ஆய்வுகூட மையத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

மேற்படி கல்லூரியின் பழைய மாணவர்களின் நிதி ஒதுக்கீட்டில் மூன்று கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூட மையத் திறப்புவிழா யாழ்.ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்காக சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு ஜனாதிபதி வருகை தருவதற்குப் பழைய மாணவர்கள் சிலர் எதிர்ப்பு வெளியிட்டிருந்த அதேவேளை, காணாமலாக்கப்பட்டவர்களும் ஜனாதிபதிக்கு எதிராகப் போராட்டமொன்றைக் கல்லூரிக்கு முன்பாக முன்னெடுத்தனர்.

இதனையடுத்து ஜனாதிபதியின் யாழ். விஜயத்துக்கு என்றுமில்லாதவாறு பலத்த பாது காப்பு வழங்கப்பட்டது. குறிப்பாக நிகழ்வு நடைபெறும் இடத்திலும் யாழ். நகரைச் சூழவும் பெருமளவிலான பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டனர்.

இவ்வாறு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் யாழ். வந்த ஜனாதிபதி சென். பற்றிக்ஸ் கல்லூரியில் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தைத் திறந்தார்.

யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வீ.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ்.மாவட்டச் செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி தர்சன ஹெட்டியாராச்சி மற்றும் அருட் தந்தையர்கள், அரச அதிகாரிகள், கன்னியாஸ்திரிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ –7)

### பாகிஸ்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தானின் 78ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி மைத்திரிபால அங்கு செல்கிறார்.

பாகிஸ்தான் செல்லும் ஜனாதிபதி குடியரசுதின நிகழ்வுகளில் பங்கேற்றதன் பின்னர் அந் நாட்டுத் தலைவர்களுடன் இரு தரப்பு பேச்சுக்களிலும் ஈடுபட உள்ளார். குறிப்பாக இரு தரப்புப் பொருளாதார ஒத்துழைப்புகள் குறித்து அவர் கலந்துரையாடவுள்ளார். (ஐ)

### நாளை

21.03.2018
புதன்கிழமை

நட்சத்திரம் : பரணி மு.இ 7.35 வரை
திதி : சதுர்த்தி பி.ப 4.09 வரை
சுபநேரம் : 4.47 –6.17 வரை
இராகுகாலம் : 12.17 – 1.47 வரை

# பெறுமதியான அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்ப மக்கள் பிரதிநிதிகள் முன்னுதாரணமாக இருக்கவேண்டும்!

ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 20

பண்புமிக்க உயர் பெறுமதியுள்ள அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்காக மக்கள் பிரதிநிதிகள் தமது நடத்தைகளாலும் செயற்பாடுகளாலும் பொதுமக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதும் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தக் கால அட்டவணைக்கேற்ப மக்களின் பிரச்சினைகளைத்தீர்த்துவைப்பதற்குதமது உயரிய பங்களிப்பை பெற்றுக்கொடுக்க வேண்டும். அதன்போது பொதுமக்களுடன் பிரச்சினை ஏற்படுத்திக் கொள்ளாது கொள்கைகளுக்கு உட்பட்டு பொறுமையாகவும் அவதானத்தோடும் செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுமக்களின் குரலுக்கு செவிசாய்த்து அபிவிருத்தி இலக்குகளை வெற்றி கொள்ளும் செயற்பாடுகளில் ஊழல் மோசடியற்று செயற்பட வேண்டியது அவசியம்.

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளினால் பின்னடைவுக்கு உட்படாது, குறைபாடுகளை நிவர்த்தி செய்து சரியான, வலுவான அரசியல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்நோக்கிக் கொண்டுசெல்ல பிரதிநிதிகளாகிய நீங்கள் கட்சிக்கு வலுச் சேர்க்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்ற சபை அமர்வுகளில் இயன்றளவு கலந்துகொண்டு தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தெரிவித்து, மக்களின் சேவைக்காக அர்ப் பணிப்புடன் செயற்படவேண்டும்.

புத்தகங்கள் மற்றும் செய்தித்தாள்களினூடாக தொடர்ச்சியாக அறிவைபெற்றுக்கொள்ள வேண்டும். அதனூடாக சிறந்தவொரு அரசியல் எதிர்காலத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

பிரதேசத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்கி, அவற்றின் முன்னேற்றம்தொடர்பாக மதிப்பீடு செய்து, தேவையயின் மேலும் நிதி வழங்க நான் நடவடிக்கை எடுப்பேன் எனவும் ஜனாதிபதி உறுதி வழங்கினார்.

ஜனாதிபதி உள்ளிட்ட கட்சித் தலைவர்களின் முன்னிலையில் உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகள் தூய்மையான அரசியல் இயக்கத்தில் உண்மையாகவும் அர்ப்பணிப்புடனும் ஈடுபடுவோம் என உறுதி மொழி வழங்கினர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர, பைஸர் முஸ்தபா, துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட அமைச்சர்களும் இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில், ஆளுநர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண முதலமைச்சர்கள், மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

(கு)

# அரசியல் கைதியின் குடும்பத்துக்காக கண்ணீர் விட்ட பொலிஸ் உத்தியோகத்தர்



கொழும்பு, மார்ச் 20

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான ஆனந்த சுதாகரின் மனைவி யோகராணியின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கண்கலங்கிய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு கடந்த வருடம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனின் மனைவி யோகராணி கடந்த 15 ஆம் திகதி சுகவீனம் காரணமாக மரணமடைந்திருந்தார்.

இவரின் இறுதி நிகழ்வு நேற்றுமுன் தினம் கிளிநொச்சி மருதநகர் கிராமத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதி நிகழ்வுக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் ஆனந்த சுதாகர் அழைத்து வரப்பட்டு மூன்று மணித்தியாலங்கள் மனைவியின் இறுதி நிகழ்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப் பட்டிருந்த நிலையில், அவரை அழைத்து வந்த சிங்கள பொலிஸ் உத்தியோகத்தரும் கண்கலங்கியமை அனைவருக்கும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பின்னர் மீண்டும் பொலிஸாரால் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளார். தந்தை சிறைச்சாலை வாகனத்தில் ஏறியபோது அவரது மகளும் தந்தையுடன் சிறைச்சாலை வாகனத்தில் ஏறியுள்ளார். இந்தச் சம்பவம் அனைவரினது மனதையும் நெகிழவைத்துள்ளது.

தந்தை 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட பின்னர் தாயின் அரவணைப்பில் வாழ்ந்த இரண்டு பிள்ளைகளும் தற்போது தந்தையை பிரிந்தும் தாயை இழந்துமுள்ளனர். இந்தச் சம்பவம் கிளிநொச்சியையே சோகத்தில் உலுக்கியுள்ளது.

# பதக்கத்துடன் சென்ற மாணவன் பரிதாபகரமாக உயிரிழந்தான்!

பாடசாலையில் இருந்து பதக்கத்துடன் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த மாணவன் வழியில் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பலாங்கொடை கைரேனகம பள்ளிக்கூடத்தில் ஒன்பதாம் வகுப்பில் கல்வி கற்கும் தில்ஹாரருவன் குமார என்ற 13 வயதுடைய மாணவன் பள்ளிக்கூடத்தில் இடம்பெற்ற மாணவ வகுப்புத் தலைவர் பதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு வீட்டுக்குத்திரும்பும்போதே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மழை இல்லாத நேரத்தில் திடீரென வானத்தில் இருந்து வந்த தீ பந்து போன்று ஏதோ ஒன்று இந்த மாணவன் உட்பட மூவரைத் தாக்கியுள்ளது.

இதில் இந்த மாணவன் சுயநினைவற்ற நிலையில் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்துள்ளார்.

மின்னல் தாக்கியமையினால் தான் இந்த மாணவன் உயிரிழந்துள்ளார் என பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரயில் கட்டணம் மறுசீரமைக்கும் போது குறைந்த கட்டணத்தில் மாற்றம் வராது



கொழும்பு, மார்ச் 20

ரயில் கட்டணம் மறு சீரமைக்கும் பொழுது ஆகக் குறைந்த கட்டணத்தில் மாற்றம் ஏற்படாது என்று ரயில்வே திணைக்களப் பொது முகாமையாளர் எஸ்.எம்.அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

10 வருடங்களின் பின்னர், ரயில் கட்டணத்தில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுவதுடன், நிதியமைச்சின் அங்கீகாரம் இதற்குக் கிடைத்துள்ளது. மேலதிக பொது முகாமையாளர் உதய குமாரவின் தலைமையில் குழுக் கட்டண அதிகரிப்பு முறைக்குதான் ஆலோசனை வழங்கியிருக்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கட்டண மறுசீரமைப்பு, அரசின் அங்கீகாரத் தின் பின்னர், வர்த்தமானியில் வெளியிடப்படும். இதற்காக சில நாள்கள் செல்லலாம் எனவும் ரயில்வே திணைக்களப் பொது முகாமையாளர் மேலும் கூறினார்.

நாளாந்தம் சுமார் 5 லட்சம் பேர் ரயிலில் பயணிக்கின்றனர். புதிதாக 15 ரயில்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

ரயில்வே திணைக்களத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு பொருள்களைக் கொண்டுசெல்வதில் கவனம் செலுத்தியிருக்கிறோம் என்றும் எஸ்.எம்.அபேவிக்ரம மேலும் குறிப்பிட்டார்.

# நீங்கள் செய்வதே உங்களை வந்து சேரும்

இவ்வுலக வாழ்க்கையிலே எல்லோரும், மகிழ்வோடும் பிரச்சினைகள் இன்றியும் சுதந்திரமாகவும் வாழ விரும்புவது இயல்பானதாகும். ஆனால் நாம் பிறருக்கு அநீதியான செயல்களைச் செய்து கொண்டு எமக்கு நீதி வழங்கப்படவில்லை என்று கோசமிடுவதால் நீதி எங்கள் வாழ்க்கையிலே எதிரானதாகவே இருக்கும். நாங்கள் பிறரை மன்னிக்காமல், பிறருக்குக் கொடுக்காமல், பிறரைப் பழி சுமத்திக் கொண்டு பிறரை ஏற்றுக் கொள்ளாத, மனநிலையோடு வாழ்ந்து கொண்டு இவைகளெல்லாம் நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று ஏங்கினால் அவை கைகூடுவது அரிதானதாகும்.



தவக்கால சிந்தனை

இயேசு இதனைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார். "நீங்கள் எந்த அளவையால் அளப்பீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்" (லூக்:ம:38) என்பதை உறுதிபடத் தெளிவுபடுத்துகின்றார்.

நாம் குற்றவாளிகள் அல்லர். மற்றவர்களே குற்றவாளிகள், அநீதியானவர்கள், குழப்பக்காரர்கள், தீயவர்கள் என்று தீர்ப்பளிக்க முந்திக் கொள்கின்றோம். இதனாலே சமூகத்திலே பிரச்சினைகளும் குழப்பங்களும் போராட்டங்களும், அமைதியற்ற சூழ்நிலைகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பிறருக்கு உரியதைக் கொடுக்காமல் அல்லது கவர்ந்து கொண்டு வாழ்கின்றோமென்றால் எம்மால் நிம்மதியாக அமைதியாக மகிழ்ச்சியாக வாழ முடியாது. ஆனால் மனித வாழ்விலும் சமூக வாழ்விலும் அரசியல் வாழ்விலும் மனித நோயைத் தொலைத்த போலியான கௌரவ வாழ்வே இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இத்தகைய வாழ்வை நாம் வாழ்ந்தால் இறைவனின் அருள் வரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை இறை வார்த்தையின் ஒளியிலே நாம் சிந்திக்கும் பொழுது இறைவன் வழி காட்டுவார். எனவே தவக்காலம் இறைவனின் அருளைப் பெற்றுக் கொள்ளும் காலமாகையால் எமது சிந்தனைகளை, செயல்களை அறச் செயல்களை பிறர் நலனுக்காகச் செய்வோம். அதன் மூலம் இறை அருளையும் பெற்றுக் கொள்வோம்.

- அன்ரனி பீற்றர்

(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்)

# மட்டு. உள்ளூராட்சி சபை ஆரம்பிக்கும் திகதிகள் அறிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபை அமர்வுகளை ஆரம்பிப்பதற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் நான்காம் திகதி முதல் சபையாக மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை) பிரதேச சபை ஒன்றுகூடவுள்ளது எனத் தெரிவித்த அவர் ஏனைய சபைகளின் திகதிகளையும் அறிவித்தார்.

ஐந்தாம் திகதி போரதீவுப்பற்று மற்றும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைகளும், ஆறாம் திகதி மண்முனை மேற்கு பிரதேச சபை மற்றும் மண்முனைப்பற்று பிரதேசசபையும் ஒன்றுகூடவுள்ளன.

அத்துடன் 09ஆம் திகதி மட்டக்களப்பு மாநகர சபையும் ஏறாவூர் நகரசபையும், 10ஆம் திகதி ஏறாவூர்பற்றும் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையும் அதேபோன்று 11ஆம் திகதி கோறளைப்பற்று மத்தியும், வாகரை பிர தேச சபையும் ஆட்சியமைக்கவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கு உள்ளூராட்சி உறுப்பினருக்கான கூட்டம்



மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றிப் பெற்ற உறுப்பினர்களுக்கான விசேட கூட்டம் மட்டக்களப்பில் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு தாண்டவன்வெளி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இந்தக் கூட்டம் இடம் பெற்றது.

உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் அதன் சட்ட வரையறைகள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பு தொடர்பில் விசேட கருத்தரங்கும் இதன்போது நடத்தப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 79 உறுப்பினர்களும் அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 27 உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மேலும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சு.க. உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்



அம்பாறை மார்ச் 20

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் காரைதீவுப் பிரதேச சபை உறுப்பினராக முத்துலிங்கம் காண்டீபன் நேற்றுமுன்தினம் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

காரைதீவுப் பிரதேச சபைக்கான மற்றுமொரு ஸ்ரீ சு.கட்சி உறுப்பினராக எ.என்.யாகீர் சத்தியப் பிரமாணமெடுத்தார். இவர் ஸ்ரீ.சு.கட்சியின் காரைதீவுப்பிரதேச முஸ்லிம் பிரதேச அமைப்பாளராவார்.

காரைதீவு வரலாற்றில் முதல் தடவையாக இம்முறை தேர்தலில் ஸ்ரீ.சு.கட்சி ஆயிரத்து 567 வாக்குகளைப்பெற்று 2 உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டது. மாளிகைக்காடு வட்டாரத்தில் யாகீர் தேர்ந்தெடுக்கப்பட்டார். விகிதாசார முறையில் மு.காண்டீபன் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

## யானைகளைப் பார்க்க ஒன்று திரண்ட மக்கள்

அம்பாறை,மார்ச் 20

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக யானைகளின் படையெடுப்பு அதிகரித்து வருகின்றது எனப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் யானைப் பட்டாளமொன்று காரைதீவு வயற்பிரதேசத்திற்குள் படையெடுத்து வந்திருந்தன. அதனைப் பார்வையிட மக்கள் திரண்டமை குறிப்பிடத்தக்கது.



## மட்டு. வவுணதீவுப் பகுதியில் தம்பதியரின் சடலங்கள் மீட்பு



மட்டக்களப்பு,மார்ச் 20

மட்டக்களப்பு – வவுணதீவு, குறிஞ்சாமுனை பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்றுக் காலை கணவன் மற்றும் மனைவி இருவரினதும் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என வவுணதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது குறிஞ்சாமுனை முதலாம் குறுக்கிலுள்ள வீடொன்றிலிருந்து 40 வயதான க.வேதநாயகம் அவரது மனைவி 28 வயதான ந.லோகநாயகி ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

மனைவி தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளமையுடன், கணவன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறந்த பெண்ணிற்கு மூன்று மாதக் கைக்குழந்தையொன்று உள்ளது எனவும், ஏற்கனவே திருமணமாகி ஒரு மகன் உள்ளான் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று மாலை இருவருக்கும் இடையில் சண்டை இடம்பெற்றது எனவும் இதன்போது அயலவர்கள் சென்று இருவரையும் சமாதானம் செய்திருந்தனர் எனவும் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்றுள்ள மட்டக்களப்பு குற்றத் தடயவியல் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் வவுணதீவு பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி பி.ரி. நசீர் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பயனாளிகளுக்கு வீடுகள் கையளிப்பு

கட்டார் அறக்கட்டளையின் சர்வதேச இஸ்லாமிய தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியால் நிர்மாணிக்கப்பட்ட 22 வீடுகள் மற்றும் பள்ளிவாசல், பாலர் பாடசாலை உள்ளடங்கிய கிண்ணியா நடுஊற்று இருபத்திரண்டு வீட்டுத்திட்டத் தொகுதி நேற்று முன்தினம் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கட்டார் அறக்கட்டளை நிறுவனத்தின் இலங்கை நாட்டுக்கான முகாமையாளர் காலித் ஹவ்தான், பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், அல்ஹாஜ் மிஹ்லார், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர், எச்.எம்.எம்.பாயிஸ் மற்றும் கிண்ணியா நகரசபை , பிரதேச சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கிண்ணியாவில் விபத்து; இளைஞர் ஒருவர் சாவு

திருகோணமலை, மார்ச்20

கிண்ணியா – தம்பலகாமம் பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் 24 வயதான இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் கிண்ணியா தள வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதியை கைது செய்துள்ளமையுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# இந்திய அமைதிப்படையில் பணியாற்றிய அதிகாரிகள் முப்பது ஆண்டுகளுக்குப் பின் இலங்கை விஜயம்

## புலிகளையும் மெச்சினர் அவர்கள்

கொழும்பு, மார்ச் 20

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கையில் இந்திய அமைதிப்படையில் பணியாற்றிய, ஓய்வுபெற்ற இந்திய இராணுவ மற்றும் விமானப் படை அதிகாரிகள் ஒன்பது பேர், மீண்டும் கடந்த மாதம் இலங்கைக்கு வந்து திரும்பியுள்ளனர்.

இவர்கள் ஒன்பது பேரும், காடக்வாஸ்லாவில் உள்ள இந்தியாவின் தேசிய பாதுகாப்பு அகடமியில் 37 ஆவது கற்கை நெறியில் இணைந்திருந்தவர்களாவர்.

பின்னர் 1987-89 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இவர்கள் இந்திய அமைதிப் படையில் இலங்கையில் பணியாற்றியிருந்தனர்.தற்போது ஓய்வுபெற்றுள்ள இந்த அதிகாரிகள் ஒன்பது பேரும், இலங்கைக்கு கடந்த பெப்ரவரி மாதம் விஜயம் செய்தனர்.

இவர்களின் குழு இலங்கையின் வடபகுதியில் 9 நாள்கள் தங்கியிருந்து வெவ்வேறு பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டது.




அந்தக் காலகட்ட நினைவுகளில் இருந்து விடுபடுவதே இந்தப் பயணத்தின் நோக்கம் என்று, மேஜர் ஜெனரல் ஜோஸ் மணவாளன் தெரிவித்தார்.

அங்கு போரின் எந்தத் தடயமும் இல்லை. நாடு மாறி விட்டது என்று கூறினார் மேஜர் ஜெனரல் ஜோஸ் மணவாளன்.

இவர்யாழ்ப்பாணம்,வவுனியா பகுதிகளில் இந்திய அமைதிப் படையில் மேஜர் நிலை அதிகாரியாகப் பணியாற்றியிருந்தார்.

இவர் அடர்ந்த காட்டுக்கு நடுவே உள்ள புளியங்குளம் ரயில் நிலையத்துக்கு அருகே, இந்திய அதிகாரியான மேஜர் மைக்கல் லூயிஸின் கல்லறை அமைந்திருப்பதை நினைவு படுத்தினார்.

இந்தக் குழுவினர், முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளையும் சந்தித்துள்ளனர்.

விமானத்தில் இலங்கைக்கு அடிக்கடி வந்து சென்ற தனது நினைவுகளை மீட்ட ஹைதராபாத்தைச் சேர்ந்த விங்கொமாண்டர் உன்னி கார்தா, விடுதலைப் புலிகளின் போரிடும் திறனை மெச்சினார்.

அவர்கள் வலுவாக இருந்தனர். அவர்களின் இராணுவம் ஒழுக்கமானதாக இருந்தது என்று கூறுவதற்கு நான் தயங்கமாட்டேன்.

ஆரம்பத்தில் இந்திய அமைதிப்படையை இலங்கையில் வரவேற்றார்கள். அரசியல் சூழ் நிலைகள் மாறியமையால் அவர்களின் பார்வை மாற்றமடைந்தது என்று அவர் கூறினார்.

ஒரு சோதனை விமானியாக விங்கொமாண்டர் கார்தா, திருவனந்தபுரம் மற்றும் சூலூர் விமானப்படைத்தளங்களில் இருந்து, யாழ்ப்பாணத்தின் பலாலி விமானத் தளத்துக்குப் போக்குவரத்து விமானங்களில் பயணித்துள்ளார்.

இலங்கையின் வடபகுதியில் உள்ள மக்களுக்கு உணவுப் பொதிகளை வீசிய ஒப்பரேசன் பூமாலை நடவடிக்கைக்குத் திட்டமிட்டது பற்றியும் அவர் நினைவு படுத்தினார்.

அந்தப் போர் அடிப்படையில் இந்தியாவினுடையதல்ல. இலங்கை அரசுக்கும் அங்குள்ள போராளிகளுக்கும் இடையிலான போரே அது என்ற வாதங்கள் தொடர்பாக எழுப்பிய கேள்விக்கு, இந்த வினா மூன்று பத்தாண்டுகளின் பின்னர் தனது மனதிலும் உள்ளது என்று மேஜர் ஜெனரல் மணவாளன் ஒப்புக்கொண்டார்.

# ஐ.தே.கட்சி தொடர்பில் மீள்பரிசீலனை வேண்டும்

### திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

ஐ.தே.க வின் தலைவருக்கு எதிராக கீழ்மட்டத்தில் இருந்து எழும் எதிர்ப்புக்கள் தொடர்பில் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி பிரதேசத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த வேளை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், நாளுக்கு நாள் ஐக்கிய தேசியக் கட்சியானது மக்களை



விட்டு தூர விலகிச் செல்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருந்து மூலிகைகள் உற்பத்தி; விரைவில் ஆரம்பிக்கத் திட்டம்!

கொழும்பு, மார்ச் 20

தேசிய மருந்து தயாரிப்புக்குத் தேவையான மருந்து மூலிகைகளை உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் வங்கி வீதியில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் வடமத்திய மாகாண பிரதேச அலுவலகத்தையும், விற்பனை நிலையத்தையும் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில், ஆயுள்வேதத் திணைக்களத்திற்கு உட்பட்ட மூலிகைகளும் உற்பத்தி செய்யப்படவுள்ளன என்றும் -

மூலிகைக் கன்றுகளின் உற்பத்திக்காக அனுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு பயன்படுத்தப்பட உள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படும் என்றும் சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

# சூரிய சக்தி அதிகார சபைக்கு புதிய கட்டடம்

கொழும்பு, மார்ச் 20

சூரிய சக்தி அதிகார சபைக்கு புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

சுற்றாடலுக்குப் பொருத்தமான வகையில் அமைக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்திற்கு 55 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வருடம் டிசெம்பர் மாதம் அளவில் இதன் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என மின் வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

# மாணவர்களுக்கான வட்டியில்லா கடன் திட்டம்; விண்ணப்பிப்பதற்கான திகதி இன்றுடன் நிறைவு

கொழும்பு, மார்ச் 20

2018ஆம் ஆண்டுவட்டியில்லா மாணவர் கடன் திட்டத்திற்கு அமைவாக, விண்ணப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால எல்லை இன்றுடன் நிறைவடைகிறது.

இதுதொடர்பாக உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி ஜயந்தி விஜேதுங்க தெரிவிக்கையில்-

2016 ஆம் ஆண்டில், கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு, அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் பட்டதாரிக் கற்கை நெறியைத் தொடர்வதற்காக இந்த வட்டியற்ற மாணவர் கடனுதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் 8 லட்சம் ரூபாவை அரச வங்கிகள் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 5 வருடங்களின் பின்னர் அறிவிடப்படும்.

பட்டதாரிக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து தொழிலில் ஈடுபடும் மாணவர்களுக்கு இந்தக் கடனைச் செலுத்த முடியும். 5 ஆயிரம் மாணவர்கள் இந்தக் கடன் திட்டத்தின் கீழ் உள்வாங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அரச பல்கலைக்கழகம் அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில், கற்கை நெறிகளைத் தொடர்வதற்குத் தகுதி பெற்றுள்ள மாணவர்கள், இதற்காக விண்ணப்பிக்க முடியாது என்றும் உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி ஜயந்தி விஜேதுங்க குறிப்பிட்டுள்ளார்.

(க)

# சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டல் வழங்கும் நோக்கில் மனிதவள பயிற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம் விரைவில்!

கொழும்பு, மார்ச் 20

தென் மாகாணத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சரியான வழிகாட்டிகளை வழங்கும் நோக்கில் மனிதவள பயிற்சி அபிவிருத்திக்கான வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு றுஹுணு சுற்றுலா செயற்பாட்டு அணி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன் கீழ் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றமையுடன், பல்வேறு மொழி தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனமும் இணைந்து மாதாந்த கற்கை நெறிகள் மூலம் இத்துறையில் புதிதாக பிரவேசிப்பவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட உள்ளது.

இதன் மூலம் சுமார் 400 பேர் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவார்கள் என்று றுஹுணு சுற்றுலா செயலணி தெரிவித்துள்ளது.



# இலங்கை வங்கியின் மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 20

இலங்கை வங்கியின் யாழ். மாவட்டக் கிளைகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின நிகழ்வுகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் எம்.ஜே.பிரபாகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினராக யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் மிமலா தேவி விமலநாதன் மற்றும் கோகிலா மகேந்திரன், சாவித்திரி ரவிச்சந்திரன், இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ஜி.சகாதேவன் ஆகியோர் கலந்துகொள்வர். மகளிர் தின சிறப்புரை, பட்டிமன்றம், பாடல் மற்றும் நடன நிகழ்வுகள் இதில் இடம்பெறவுள்ளன.

# தினசரி ராசி பலன் (20.03.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் பங்குனித்திங்கள் 06 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை திரிதீயைத்திதி மாலை 4.50மணி வரை பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம். அசுவினி இரவு 7.44 மணி வரை பின்னர் பரணி. அமிர்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *மாலை 3.19 மணி முதல் 4.49 மணி வரை*

**சுபநேரம்** - *பகல் 10.39 மணி முதல் 12.09 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *பங்குனி மாத வளர்பிறை திரிதீயை.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *அசுவினி.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** ஆக்கபூர்வமான நாள். பணப் புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் மேம்படைவார்கள்.

**ரிஷபம்** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியாக அலைய வேண்டி வரும். சிலர் படித்து முடித்த கையோடு வேலை தேடித் திரிவார்கள். தொழிலாளர்கள் தொழில் வாய்ப்பைத் தேடித் திரிவார்கள்.

**மிதுனம்** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். குடும்ப நிலையில் குதூகலம் நிரம்பிக் காணப்படும். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். வீடு, வாகன வசதிகள் பெருகும்.

**கடகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதமாகும். வியாபாரம் குறைந்த அளவிலேயே நடக்கும்.

**சிம்மம்** இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். இல்லத்தில் இனிமை கொலுவிருக்கும். வெளிநாட்டு உறவினர் வரவால் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**கன்னி** சலனம் மிகுந்த நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். நண்பர்களுடன் பகைக்க நேரும். தொழிலில் கவனக் குறைவு உண்டாகும்.

**துலாம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் வேலைச் சுமை, பொறுப்புக்கள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் நன்மைகள் உண்டாகும்.

**தனுசு** அனுகூலமான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிலவும். எண்ணிய காரியங்கள் துல்லியமாய் நிறைவேறும். மாணவர்கள் சுறுசுறுப்பாகக் கற்பார்கள்.

**மகரம்** சஞ்சலமான நாள். வருமானம் குறையும். மனதில் ஒரு வித கவலை தோன்றும். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் உண்டாகும். உறவினர்களால் தொல்லைகள் உண்டாகும்.

**கும்பம்** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப உறவு மேம்படும். அரசியல் வாதிகளின் தொடர்பால் அனுகூலம் உண்டாகும். செய்தொழில் விருத்தியடையும்.

**மீனம்** கீர்த்தியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்ப உறவில் அன்னியோன்யம் காணப்படும். குடும்பப் பெண்கள் பொறுப்புக்களைச் செவ்வனே நடத்தி பாராட்டுக்களைப் பெறுவார்கள்.

**சந்திராட்டம நாள்: உத்தரம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# மீள்குடியேறிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கள ஆய்வுப்பணி



யாழ்ப்பாணம், மார்ச் 20

வலிகாமம் கல்வி வலயத்தில் புதிதாக மக்கள் மீள் குடியேற்றம் இடம்பெற்ற பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளின் தற்போதைய நிலைமை,தேவைகள் குறித்து வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தலைமையில் கள ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வலிகாமம் கல்வி வலயத்தில் ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம், ஊரணி கனிஷ்ட வித்தியாலயம், தையிட்டி கணேசா வித்தியாலயம், தையிட்டி சிவகுருநாதர் வித்தியாலயம், ஒட்டகப்புலம் றோ.க.த.க பாடசாலை உள்ளிட்ட ஐந்து பாடசாலைகள் கள ஆய்வுப்பணி மூலம் தற்போதைய நிலை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீளக்குடியமர்ந்த பாடசாலைகளின் எல்லைகளுக்கு அருகில் இராணுவ முகாம்கள் காணப்படுகின்றமையுடன் பாடசாலைகளுக்கு எந்தவித மறைப்புக்களும் இல்லாமல் திறந்த வெளியாக காணப்படுவதும் ஆய்வுப்பணியின்போது கண்டறியப்பட்டு அவற்றுக்கான மறைப்பு வேலிகளை அமைத்து மாணவர்களின் இயல்பான கற்றல் செயற்பாட்டிற்கு வழியமைக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

அதேவேளை, பாடசாலைச் சூழல் பற்றைகளாலும், கற்பாறைகளினாலும் நிறைந்து இருப்பதால்,அவற்றை அப்புறப்படுத்துவதற்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபையிடம் இருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்குக் கல்வி அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இராணுவக் கட்டுப்பட்டில் இருந்து 2017 மே மாதத்தின் பின்னர் விடுவிக்கப்பட்ட ஒட்டகப்புலம் றோ.க.த.க.பாடசாலை மற்றும் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட ஏனைய பாடசாலைகள் தற்போது போதிய அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கிக்கொண்டிருக்கின்றமை ஆய்வுப் பணி மூலம் கண்டறியப்பட்டு உடனடியாக தீர்வு காணக் கூடிய விடயங்களை உடன் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்துமாறு அதிகாரிகளுக்குக் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

மேற்குறித்த பாடசாலைகள் நீண்ட காலம் இயங்காத காரணத்தாலும் போர் காரணமாகவும் பாடசாலைகளின் பெரும்பாலான கட்டடங்கள் அழிவுற்ற நிலையில் காணப்படுகின்றமையால் குறித்த பாடசாலை களுக்குத் தேவையான கட்ட டங்கள்,தளபாடங்கள் உள்ளிட்டவற்றை பெற்றுக் கொடுப்பதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறும் கல்வி அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

இந்தக் கள ஆய்வுப்பணியில் கல்வி அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் ந.அனந்தராஜ், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பிரேமகாந்தன், திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அன்ரனி, வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையின் தொழில்நுட்ப அலுவலர் மற்றும் கல்வி அமைச்சின் பாடசாலைகள் வேலைகள் பணிப்பாளர் சுரேஷ் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.



நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வின் போது முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்த மாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் பாடசாலை விஞ்ஞான மன்ற ஆசிரியர்களிடம் பல்லூடக எறியியையும், அதற்கான திரையையும் அன்பளிப்புச் செய்த வேளையில்... (இ)

### யாழ். தமிழ்ச் சங்கம் நடத்தும்

# மரபுக் கவிதை பயிலரங்கம்

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம் நடத்தும் மரபுக் கவிதை பயிலரங்கில் கலந்து கொள்ள ஆர்வமுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வகுப்புக்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும். பயிலரங்கில் கவிஞர்கள் சோ.பத்மநாதன், த.ஜெயசீலன் ஆகியோர் வளவாளர்களாகப் பங்கு கொள்ளவுள்ளனர்.

12 வகுப்புக்கள் கொண்டனவாக (30 மணி நேரம் 3 மாதங்கள்) கற்கை நெறி அமையவுள்ளது. கவிதைத் துறையில் ஆர்வமுள்ள எவரும் வயதுக் கட்டுப்பாடின்றி இக்கற்கை நெறியில் பங்குகொள்ளலாம். ஆனால் வரவு முக்கியமானது. 30 பேர் மாத்திரமே வகுப்பில் அனுமதிக்கப்படுவர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், இல.28, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரி இடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடிதவுறையையும் தங்களது சுயவிவரத்திரட்டு ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டுமெனத் தமிழ்ச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5மணி வரை -

**வவுனியா பிரதேசத்தில்** - கொக்கிலியவிலிருந்து ஓமந்தை வரை, Raj Fishering Net Factory, Union Allience Ltd, Senok, AMP Ceylon Pvt Ltd ஓமந்தை தொழில்நுட்பக் கல்லூரி, கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்பமருதங்குளம், பெரியகூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் - மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)



## காலத்தால் என்றும் மறக்க முடியாத

# அறிவியலாளர் ஸ்ரீபன் ஹாக்கிங்

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக இயற்பிய லாளரும், அதிக அளவில் விற்ற நூல்களின் ஆசிரியருமான ஸ்டீபன் ஹாக்கிங் அண்மையில் காலமானார் என்பது தெரிந்ததே.

தனது சக்கர நாற்காலியில் இருந்தபடி அண்டத்தில் உலா சென்றவர் ஸ்டீபன் ஹாக்கிங். ஆல்பெர்ட் ஐன்ஸ்டைனுக்குப் பிறகு, பொதுமக்களின் சிந்தையை ஸ்டீபன் ஹாக்கிங் அளவுக்குக் கொள்ளை கொண்ட, உலகெங்கும் கோடானு கோடி மக்களால் நேசிக்கப்பட்ட வேறோர் அறிவியலாளரை நம்மால் காண முடியாது என்கிறார் கோட்பாட்டு இயற்பியலாளர் மிஷியோ காக்கு.

இந்தப் புகழை ‘காலத்தின் சுருக்கமான வரலாறு: பெருவெடிப்பிலிருந்து கருந்துளைகள் வரை’ (எ ப்ரீப் ஹிஸ்டரி ஒப் டைம்: ப்ரம் பிக் பேங் டு ப்ளாக் ஹோல்ஸ்’) என்ற 1988 இல் வெளியான நூலின் மூலம் ஹாக்கிங் பெற்றார். இதுவரை ஒரு கோடி பிரதிகளுக்கும் மேல் அந்த நூல் விற்றிருக்கிறது.

அறிவியலைப் பொறுத்தவரை விநோதமான ஒரு கண்டுபிடிப்புக்காக ஹாக்கிங் என்றென்றும் நினைவுகூரப்படுவார். ஜென் பவுத்தத்தின் முரண் கேள்வியான கோவான் வடிவில் அந்தக் கண்டுபிடிப்பைப் பற்றி இப்படிச் சொல்லலாம்: கருந்துளை எப்போது கருப்பாக இருக்காது? அது வெடிக்கும் போது!

**முதல் மைல்கல்**

நவீன இயற்பியலின் திருப்புமுனை எங்கு நிகழ்ந்தது தெரியுமா? 1973 இறுதியில் ஹாக்கிங்கின் மூளையின் சுவர்களில் நிகழ்ந்தது! அணுவுலகின் உள்ளே ஆட்சிசெய்யும் குவாண்டம் கோட்பாட்டைக் கருந்துளைகளுக்கு ஹாக்கிங் பொருத்திப் பார்க்க முயன்றபோது அந்தத் திருப்புமுனை நிகழ்ந்தது.

நீண்ட நெடிய நேரம் மண்டையைப் போட்டு உடைத்துக்கொண்டு கணக்குகள் போட்டுப்பார்த்த பிறகு, ஹாக்கிங் கண்டுபிடித்த ஒரு விஷயம் அவரையே குழப்பத்தில் ஆழ்த்தியது. கருந்துளைகள் உண்மையிலேயே கருப்பாக இருப்பதில்லை என்று அவர் கண்டறிந்தார். அவற்றிலிருந்தும் ஒருகட்டத்தில் கதிர்வீச்சும் அணுத்துகள்களும் கசிய ஆரம்பித்து இறுதியில், வெகு நீண்ட யுகங்களுக்குப் பிறகு, கருந்துளை வெடித்து மறைந்துவிடும் என்று ஹாக்கிங் கண்டறிந்தார்.

ஒளி உட்பட எதுவுமே தப்பிக்க முடியாது என்று கருதப்பட்ட கருந்துளைக்குள்ளிருந்து அணுத்துகள்கள் தப்பிக்கின்றன என்பதை ஹாக்கிங் உட்பட யாருமே முதலில் நம்பவில்லை. உண்மையில், நான் இந்த விஷயத்தைத் தேடிக்கொண்டிருக்கவில்லை. தற்செயலாகத்தான் இதை நான் கண்டறிந்தேன் என்று ஒரு நேர்காணலில் ஹாக்கிங் கூறினார்.

தனது கணிப்பை –நேச்சர்– இதழில் கருந்துளை வெடிப்புகள்? என்ற தலைப்பில் 1974–ல் கட்டுரையாக எழுதினார் ஹாக்கிங். இயற்கையைப் பற்றிய ஒருங்கிணைந்த ஒற்றைக் கோட்பாட்டை நோக்கிய, அதாவது ஒன்றுக்கொன்று முரண்படும் சார்பியல் கோட்பாட்டையும் குவாண்டம் கோட்பாட்டையும் இணைக்கும் முயற்சியை நோக்கிய பயணத்தில் முதல் மைல்கல் என்று அறிவியலாளர்களால் இந்தக் கட்டுரை புகழப்படுகிறது.

ஹாக்கிங் கதிர்வீச்சு என்று பெயரிடப்பட்ட இந்தக் கண்டுபிடிப்பு, கருந்துளைகளைப் பற்றிய கருத்தாக்கங்களைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டது. அழிவுசக்திகள் என்ற அடையாளத்தைக் கொண்டிருந்த கருந்துளைகளுக்கு படைப்புச் சக்திகள் என்ற அடையாளத்தை அல்லது மறுசுழற்சியாளர்கள் என்ற அடையாளத்தை ஹாக்கிங்கின் கண்டுபிடிப்பு வழங்கியது.

கருந்துளைக்குள் யாராவது குதித்தால் என்ன ஆகும் என்று நீங்கள் கேட்கலாம். குதித்தவர் உயிர் பிழைக்க வாய்ப்பு இல்லை என்றே கருதுகிறேன். கருந்துளைக்குள் குதித்தவரின் உடலைக் கட்டமைத்திருந்த அணுக்களும் திரும்பி வராது. ஆனால், அவருடைய நிறையின் ஆற்றல் திரும்பக் கிடைக்கும். இது ஒட்டுமொத்த பிரபஞ்சத்துக்கும் பொருந்தும் என்று 1978 இல் ஒரு நேர்காணலில் ஹாக்கிங் கூறினார்.

ஹாக்கிங் கதிர்வீச்சு–குறித்த சூத்திரத்தைத் தனது கல்லறையில் பொறித்து வைக்க வேண்டும் என்று 2002 இல் ஹாக்கிங் கூறினார்.

**வியக்கவைத்த உத்வேகம்**

தனது அறிவு வாழ்க்கையில் மட்டுமல்ல, தனது பணி வாழ்க்கையிலும் சொந்த வாழ்க்கையிலும் தனது எல்லைகளை விரிவாக்கிக்கொண்டவர் ஹாக்கிங். அறிவியல் மாநாடுகளுக்காக இந்தப் பூமியைச் சுற்றிவந்தவர் அவர். அண்டார்க்டிகா உள்ளிட்ட அனைத்துக் கண்டங்களுக்கும் சென்றிருக்கிறார்; இரண்டுமுறை திருமணம் செய்துகொண்டார்; மூன்று குழந்தைகளுக்குத் தகப்பன் ஆனார்; –த சிம்ப்ஸன்ஸ்–, – ஸ்டார் டிரெக்: த நெக்ஸ்ட் ஜெனரேஷன்–, –த பிக் பேங் தியரி– உள்ளிட்ட தொலைக்காட்சித் தொடர்களில் தோன்றியிருக்கிறார்.

சூடான காற்று நிரம்பிய பலூனில் பறந்து தனது 60 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். 2007 இல் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட – போயிங் 727– விமானத்தில் –பூஜ்ஜிய ஈர்ப்புவிசை– பயணத்தை மேற்கொண்டு எடையற்ற தன்மையை அனுபவித்தார். விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் கனவுடனும் இருந்தார். ஏன் இதுபோன்ற ஆபத்தான செயல்களில் ஈடுபடுகிறீர்கள் என்று கேட்டதற்கு ஹாக்கிங் இப்படிப் பதிலளித்தார்: உத்வேகத்தில் எந்த ஊனமும் இல்லாதபட்சத்தில் உடல் ஊனங்களால் முடங்கிப்போய்விடக் கூடாது என்று எல்லோருக்கும் காட்டுவதற்கு விரும்பினேன். அவரது ஆத்ம உத்வேகம் பலரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டுச் சென்றிருக்கிறது.

இங்கிலாந்தில் 1942 இல் ஜனவரி 8 ஆம் திகதி ஸ்டீபன் ஹாக்கிங் பிறந்தார். –கலீலியோ இறந்து சரியாக 300 ஆண்டுகள் கழித்து–என்று ஹாக்கிங் சொல்லிக்கொள்ள விரும்புவார். பள்ளிப் படிப்பில் ஹாக்கிங் சராசரியான மாணவராகவே இருந்தார். ஒக்ஸ்ஃபோர்ட்டு பல்கலைக்கழகத்தில் சேர்ந்தபோது கணிதமும் இயற்பியலும் மிகவும் எளிமையாக இருந்ததால் – பிரபஞ்சவியல் – அவருடைய ஆர்வத்தை ஈர்த்தது. ஏனென்றால், இந்தப் பிரபஞ்சம் எதிலிருந்து தோன்றியது என்ற பெருங்கேள்விக்கு – பிரபஞ்சவியல் – தானே விடை தேடுகிறது என்றார் ஹாக்கிங்.




**“ உத்வேகத்தில் எந்த ஊனமும் இல்லாத பட்சத்தில் உடல் ஊனத்தால் முடங்கக் கூடாது...”**

**வாழ்வின் நோக்கம்**

பட்டப் படிப்புக்குப் பிறகு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துக்கு ஆய்வறிஞராகச் சென்றார். 1963 இல், அவரது 21 ஆவது பிறந்த நாளுக்குச் சில நாள்கள் கழித்து, அவருக்கு – ஆமியோட்ராஃபிக் லேட்டரல் ஸ்கிலரோஸிஸ் – என்ற நோய் இருக்கின்றது என மருத்துவர்கள் கூறினார்கள். மிஞ்சிப்போனால் மூன்று ஆண்டுகள்தான் உயிருடன் இருப்பார் என்றும் கூறினார்கள்.

கடுமையான மன இறுக்கத்துக்கு ஆளானார் ஹாக்கிங். தனக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுவதாக ஹாக்கிங்குக்குக் கனவெல்லாம் வந்தது. பிறகு, எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக, அவரது நோய் ஒருவித ஸ்திரத் தன்மைக்கு வந்தது.

தனது தசை மீதான கட்டுப்பாட்டை ஹாக்கிங் கொஞ்சம் கொஞ்சமாக இழக்க ஆரம்பித்தாலும் குறுகிய தூர நடை, எளிய வேலைகள், உடை மாற்றிக் கொள்ளுதல் போன்ற செயல்களைக் கொஞ்சம் சிரமப்பட்டு அவரால் செய்ய முடிந்தது. வாழ்வதற்கு ஒரு புது நோக்கத்தை அவர் உணர்ந்தார். அகால மரணம் என்ற சாத்தியத்தை எதிர்கொண்டிருக்கும்போதுதான் இந்த வாழ்க்கையானது வாழத் தகுந்தது என்றும், நீங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளமாக இருக்கின்றன என்றும் உங்களுக்குப் புரிபடும் என்றார் ஹாக்கிங்.

1965 இல் ஜேன் வைல்ட் என்ற மொழியியல் மாணவியை ஹாக்கிங் மணந்து கொண்டார். அப்போது, பிழைப்பை நடத்துவதற்கும் தனது முனைவர் பட்டத்துக்காகப் பணியாற்றுவதற்கும் பணத் தேவை இருந்ததால், வேலை தேட வேண்டிய கட்டாயம். நீள நீளமான சமன்பாடுகள்தான் பிரபஞ்சவியலாளர்களின் முக்கியமான கருவிகள். ஆனால், ஹாக்கிங்கின் நோயானது நீளமான சமன்பாடுகளை எழுத முடியாத நிலைக்கு அவரை ஆழ்த்திவிட்டது. இந்த ஊனத்தை அவர் தனது பலமாக மாற்றிக்கொண்டார். சிந்தனைப் பாய்ச்சல்கள் நிகழ்த்தும் விதத்தில் அவர் தனது ஆற்றலையெல்லாம் ஒன்றுதிரட்டிக்கொண்டார். பிற்காலத்தில், தனது சிந்தனைப் பாய்ச்சல்களைச் சரியான கணித மொழியில் மாற்றும் வேலையை மற்றவர்களுக்கு ஹாக்கிங் விட்டுவைத்தார்.

**பிரபஞ்ச முட்டுச்சந்து**

ஈர்ப்புவிசை குறித்த ஐன்ஸ்டைனின் பொதுச்சார்பியல் கோட்பாட்டின் விளைவான கணிப்புத்தான் கருந்துளைகள். படுத்திருக்கும் நபரால் மெத்தையில் குழிவு ஏற்படுவதுபோல், நிறையும் ஆற்றலும் அண்டவெளியை (ஸ்பேஸ்) எப்படி வளைக்கின்றன என்பதைப் பற்றி பொதுச் சார்பியல் கோட்பாடு விவரிக்கிறது. ஈர்ப்புப்புலம் (கிராவிட்டேனல் ஃபீல்ட்) ஒன்றை ஒளிக்கதிர்கள் கடக்கும்போது வளையும், நடுவில் பள்ளமாக இருக்கும் மெத்தையின் மேல் கோலிக்குண்டுகளை உருட்டினால் படுத்திருக்கும் நபரைச் சுற்றி வளைவாக அந்தக் கோலிக் குண்டுகள் உருளும் அல்லவா, அது போல!

ஓர் இடத்தில் மிக மிக அதிக அளவிலான நிறையோ ஆற்றலோ இருந்தால் சுற்றியுள்ள இடம் (அதாவது அண்டவெளி) முடிவே இல்லாமல் வளையும்; மாயாஜாலக்காரர் தன் மேல் ஒரு போர்வையைப் போர்த்திக்கொண்டு மாயமாக மறைவதைப் போல, குலைந்துகொண்டிருக்கும் மிகப் பெரிய விண்மீன் போன்ற, மிகமிக அடர்த்தியான பொருளானது தன்னைச் சுற்றியுள்ள இடத்தை வளைத்துக் கொண்டு காணாமற்போகும்.

அதாவது, முடிவற்ற அடர்த்தியைக் கொண்டு மிக நுண்ணியதாகத் தனக்குள்ளே குறுகி, ஒருமை (சிங்குலாரிட்டி) என்ற நிலையை அடையும். ஒருவகையில் பிரபஞ்ச முட்டுச்சந்து, இயற்பியல் விதிகளெல்லாம் அங்கே அர்த்தமிழந்து போகும். இதுதான் கருந்துளை. இந்தப் பிரபஞ்சத்தில் கோடிக்கணக்கான கருந்துளைகள் இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

விரிவடைந்துகொண்டிருக்கும் பிரபஞ்சத்தைப் படச் சுருள்போலப் பின்னோக்கி ஓட்டினால் மேற்கண்டதுபோல் ஒரு ஒருமைநிலை யை நான் காணலாம் என்று 1966 இல் தனது முனைவர் பட்ட ஆய்வில் ஹாக்கிங் கூறினார். இடமும் காலமும் ஒரு தொடக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பது இதன் முடிபு.

(மிகுதி நாளை....)











வட பிராந்திய சத்தியசாயி சர்வதேச நிறுவனத்தினர் மாசடைந்து வருகின்ற கடற்கரைச் சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் ஏற்பாடு செய்திருந்த சிரமதான நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப் பாணம் பண்ணைப் பகுதியில் இருந்து குறிப்பிட்ட சில கிலோமீற்றர் வரையான பகுதி இடம்பெற்றது. இந்தச் சமூக நலப் பணியில் இளைஞர், யுவதிகள் மற்றும் ஆர்வலர்கள் கலந்து கொண்டிருந்தனர். அந்த நிகழ்வின் சில பதிவுகள்.

(இ-19)





நீரிழிவு நோயாளரை இனம் காணும் முகமாக சுன்னாகம் பஸ் நிலையத்தில் அண்மையில் யாழ். நீரிழிவுக் கழகத்தால் நடத்தப்பட்ட மருத்துவ முகாமின் போது...! (இ)






அச்சுவேலி வளலாய் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மை திறனாய்வு நிகழ்வு அதிபர் க.ரவீந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது... (இ)




## புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் - 20 விடைகள் (பகுதி -II)

01. 1) பட்சிகள் 2) இயற்கை 3) தங்கத்தகடு 4) பளபள
    4) பெரிய பெரிய 5) சூரியனின் / சூரியன்
02. 1) அளை 2) அரிய 3) ஊன்
03. 1) உவகை 2) அலங்கோலம்
04. 1) அந்தப்புரம் 2) பவள விழா
05. 1) தூற்றிக்கொள் 2) ஏரைத்தேடு
06. 1) பிள்ளைகள் அனைவரும் கல்வி கற்க வேண்டும்
    2) எல்லோரும் வானத்தைப் பார்த்துக் கொண்டு நின்றனர்.
07. 1) திருவள்ளுவர் 2) மூதுரை 3) கர்ணன்
08. 1) செய்ந்நன்றி 2) இங்ஙனம்
09. 1) நன்னயம் 2) ஞாலத்தின்
10.
11. 1) Flowers 2) Computer
12. 1) நான் தண்ணீர் குடிக்கின்றேன் / நான் நீர் பருகுகின்றேன் 2) நான் நாளை வருவேன்.
13. 1) புஸ்தகாலய 2) லேனா
14. 1) வேகமாக ஓடுங்கள் 2) விளையாடப்போவாமா?
15. 80350
16 . 120, 720
17. 1) XII 2) XVII
18. 1325 தேங்காய்கள்
19. 44 கதிரைகள்
20. 15 குளிர்பானப் போத்தல்கள்
21. 08
22. தென்மேற்கு
23. 1) சதுரக் கூம்பகம் 2) 05
24. 28 தோடம்பழங்கள்
25. 50m
26. 2 m 20 cm
27. ரூ 360.00
28. 150 ml
29. 1) 150 km 2) 80km
30. 1) அன்னாசி - 20 2)




| | | | | |
|---|---|---|---|---|
| 31) 1 | 32) 2 | 33) 1 | 34) 3 | 35) 2 |
| 36) 1 | 37) 3 | 38) 1 | 39) 3 | 40) 2 |
| 41) 2 | 42) 1 | 43) 1 | 44) 3 | 45) 2 |
| 46) 3 | 47) 2 | 48) 3 | 49) 2 | 50) 1 |
| 51) 2 | 52) 4 | 53) 2 | 54) 3 | 55) 1 |
| 56) 2 | 57) 1 | 58) 3 | 59) 1 | 60) 1 |





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் **22**

தரம்-5

பகுதி - I


1) **இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருள்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம்**



A B C D

**இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையை தெரிவு செய்க**

1 2 3



**பின்வரும் உரைப்பகுதியில் உருவினால் காட்டப்பட்டுள்ள இடத்துக்குப் பொருத்தமான சரியான சொல்லைத் தெரிவுசெய்க**

ஒருநாள்  குளம் ஒன்றின் மேலாகப் பறந்து செல்லும்போது அக்குளம் வரண்டிருப்பதைக் கண்டது

அக்குளத்தில்  மிகுந்த சிரமத்துடன் உயிர் வாழ்வதைக் கண்டகொக்குஅதனிடம் இரக்கம்

கொண்டுகுளத்தின் அருகில் வந்து உன்னை  நிரம்பிய அழகிய குளத்துக்கு கொண்டு சென்றுவிடவா எனக் கேட்டது.

2  **உருவுக்குப் பொருத்தமான சொல்லை தெரிவு செய்க.**

1.கொக்கு 2.ஒரு கொக்கு 3.கொக்கினை

3  **உருவுக்குப் பொருத்தமான சொல்லை தெரிவு செய்க**

1.ஆமை 2.ஓர் ஆமை 3.ஆமையை

4  **உருவுக்குப் பொருத்தமான சொல்லை தெரிவு செய்க**

1.மீன்களை 2.ஒரு மீன் 3.மீன்கள்

5 **இன்றுகாலை கூட்டத்தின் போது வகுப்புமாணவன் ஒருவன் மயக்கமடைந்து நிலத்தில் விழுந்து விட்டான். பின்வரும் எக்காரணத்தினால் அவனுக்கு அவ்வாறு மயக்கம் ஏற்பட்டிருக்கலாம்?**

1.நேற்று மாலைவரை அவன் விளையாடியமை

2.கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் அவனுக்கு விருப்பமில்லாது இருந்தமை

3.அவன் காலை உணவை உண்ணாமல் பாடசாலைக்கு வந்தமை

**6)கீழ்வரும் வினாக்களில் பிழையான கருத்துகள் இடம் பெறும் விடையை தெரிவுசெய்க.**

1.வாழை ஒரு மரம். வாழை எமது நாட்டில் வளர்கிறது

2.அரிசி ஒரு வகை தானியம். நெல்லைக் குற்றினால் அரிசி கிடைக்கும்

3.புடோலங்காய் ஒருவகை காய்கறி. புடோலங்காய் வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படுகின்றது.

**1.நாய் வீட்டில் வளர்க்கப்படும் பிராணி. அது நான்கு உடையது.**

2.காகம் ஒருபறவை. அதுதாவரவுண்ணி

3.மனிதன் இரண்டுகால் விலங்கு. அவன் முலையூட்டிவகைக்குரியவன்

**7)பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டு நிறைவுவிழா 2005 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அவ்விழாவில் பங்குபற்றிய போது பிரியாவின் வயது 10 ஆகும். அப்பாடசாலையின் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெறும் போது பிரியாவிற்கு எத்தனை வயதாகும்.?**

1.40 2.50 3. 60

**8)மல்வானை கம்பளை கந்தானை** என்னும் சொற்கள் 2109 2735 6489 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளன. ஏனில் **கந்தானை** என்னும் சொல்லைஎழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட இலக்கங்கள் யாவை? (…………………………)

**9)இங்கிலாந்தின் நேரம் இலங்கையின் நேரத்திலும் பார்க்க 6 மணித்தியாலம் குறைவாகும். தினந்தோறும் ஒருமணித்தியாலம் பிந்திக்காட்டும் இக்கடிகாரத்தில் நேரம் பிற்பகல் 04.10 ஆகும் போது இங்கிலாந்தில் நேரம் என்ன? (…………………உ…….)**

10)இங்கிலாந்தில் நேரம் பிற்பகல் 6.00 ஆகும் போது இக்கடிகாரம் காட்டும் நேரம் என்ன?

(……………………………….)

- **பின்வரும் வினாகளில் உரியமுறையில் சொற்கள் பிரித்து எழுதப்படவில்லை அவற்றை உரிய முறையில் பிரித்து எழுதவும்**

**11) மரப் பலகைகளை வாகனத்தில் ஏற்றிச் செல்கின்றனர்.**

……………………………………………………………………

**12) நண்பர்கள் தேநீர் விருந்தில் கலந்து கொண்டனர்.**

……………………………………………………………………

**13) கருத்தினை தமிழில் எழுதுக.**

Happy new year:…………………………………………

Please be silent :…………………………………………

Let us go home:…………………………………………



**14) பின்வரும் மலர் வகைகளிடையே கொத்துகளாகப் பூக்கும் மலரெது?**

1.சூரியகாந்தி 2.அலரி 3.காட்டுமல்லிகை 4. நித்தியகல்யாணி

**15)மீனவர் சிறுமீன்களைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தும் கூடைவடிவில் அமைந்த உபகரணம் எது?**

1.நாம்புவ 2.கரைவலை 3.அத்தாங்கு 4. மடி

**16)ஒத்த நிலைமைகளின் கீழே பயிரிடப்படும் பின்வருவனவற்றில் விரைவில் முளைக்கும் வித்து எது?**

1.மிளகாய் 2.கடுகு 3.பாகல் 4.வெண்டி

**17) விரித்து வைக்கப்பட்ட ஓர் அகராதியின் வலப்பக்கத்திலுள்ள 1099 ஆகும். அடுத்ததாக விரிக்கும் போதுவரும் 2 எண்களும் எவை?**

……………………………………… ………………………………

**18) ஒரு தோடம்பழத்தின் விலை 8.50 எனில் 12 பழங்களின் பெறுமதி என்ன?**

……………………………………………………………………………

**19) உறை ஒன்றில் 3 வீதம் 318 சவர்காரக் கட்டிகளைக் கடதாசி உறையினுள் போடுதல் வேண்டும். இதற்கு எத்தனை உறைகள் வேண்டும்?**

……………………………………………………………………

**20)ஓர் இனிப்புபான போத்தல் ஒன்று 3 பேருக்குப் போதும் எனின் 17 பேருக்கு எத்தனை தேவை?**

……………………………………………………………………

**21)சுகந்தனின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ளதுாரம் 10 km ஆகும். அவன் பாடசாலைக்கு 1'5 துாரத்தை சைக்கிளிலும் எஞ்சியதை ரயிலிலும் சென்றான். ரயிலில் சென்ற துாரம் எவ்வளவு?**

……………………………………………………

**22) சந்திரனின் நிறை 25kg 600g எனின் அவனின் சந்திரனைப் போல 2 மடங்கு எனின் தந்தையின் நிறை யாது?**

……………………………………………………

**பின்வரும் பாடலை வாசித்து விடைஎழுதுக.**

கற்ற கல்வி ஒருவரின்

சிறந்தசெல்வம் ஆகும்

நல்லபண்புகள் இருப்பின்

நாடு உங்களைப் போற்றும்

**23) ஒருவரின் சொத்தாக விளங்குவது எது?**

……………………………………………………

**24) நாடு உங்களை போற்றவேண்டும் எனின் யாது செய்யவேண்டும்?**

……………………………………………………………………

# ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கு விரைவில் புதிய வேலைத்திட்டம்!

கொழும்பு, மார்ச் 20

ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கான புதிய வேலைத் திட்டம் ஒன்று விரைவில் அமுல்படுத்தப்படும். இதற்குத் தேவையான சட்டத்தை அறிமுகப்படுத்த தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகமும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சரத் ஜயமான்ன இதுதொடர்பாக தெரிவிக்கையில், இது குறித்து பேச்சுவார்த்தை உள்நாட்டு வெளி




நாட்டு பிரதிநிதிகளின் பங்கேற்புடன் கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்றது என்று தெரிவித்தார்.

வழக்குத் தாக்கல் செய்து தண்டனை வழங்குவதன் மூலம் மாத்திரம் ஊழல் மோசடிகளை ஒழிக்க முடியாது.

இது தொடர்பில் பல்வேறு நாடுகளும் கடைப்பிடிக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

காலாவதியான சட்டத்திற்குப் பதிலாக காலத்திற்குத் தேவையான வகையில் புதிய தொழில்நுட்பங்களும் சட்டதிட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகமும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சரத் ஜயமான்ன மேலும் தெரிவித்தார்.

(க)

# குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை வைரவிழா

வயாவிளான், மார்ச் 20

வயாவிளான் குட்டியப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வைர விழா, நிறுவுநர் தினவிழா, பரிசளிப்பு விழா என்பன இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வை.விஜயபாஸ்கர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக பலாலி விமானப் படைக் கட்டளை அதிகாரி எஸ்.டீ. ஜயவீர, சிறப்பு விருந்தினராக நிறுவுநர் அமரர் ஜோன் கென்றியின் பாரியார் திருமதி கென்றி தவமணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வைரவிழா, மலர் வெளியீடு, நிறுவுநர் நினைவுப் பேருரை, பரிசளிப்பு நிகழ்வு, கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன.

(இ)

# வடமேல் மாகாண பயிர் உற்பத்திக்கு மரக் கன்றுகளை வளர்க்கத் திட்டம்

கொழும்பு, மார்ச் 20

குருநாகல் மாவட்டத்தில் விவசாய மேம்பாட்டை இலக்காகக் கொண்டு, வடமேல் மாகாணத்தில் பயிர் உற்பத்திக்கான மரக் கன்றுகளை வளர்ப்பதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம், மகாவலி நீரைப் பயன்படுத்தி, சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் வருடாந்தம் குருநாகல் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு மரக் கன்றுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று திட்டத்திற்குப் பொறுப்பான மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் நீல் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தத்திட்டத்தின் கீழ், குருநாகல் மாவட்டத்தில், 8 பெரிய குளங்களும், 300 சிறிய குளங்களும், மகாவலி நீர் மூலம் நிரப்பப்படவுள்ளன.

இதன் மூலம் 12 ஆயிரத்து 500 ஹெக்டயர் நிலப்பரப்பிற்கு சிறிய மற்றும் பெரும் போகங்களுக்கான உற்பத்திக்கு நீர் வழங்கப்படும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அரசாங்கம் ஆகியன ஒன்றிணைந்து இதற்காக ஒரு கோடியே 60 லட்சம் ரூபாவை வழங்குகின்றன.

2016ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'சரியான உணவுக்கொள்கை மூலம் நோய்களைக் குணப்படுத்த முடியும்'

கொழும்பு, மார்ச் 20

சரியான உணவுக் கொள்கை மற்றும் நடைமுறையின் மூலம் பல நோய்களைக் குணப்படுத்த முடியும் என்று போஷாக்குத்துறை வைத்தியர் திருமதி சுஜீவா விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நீரிழிவு, கொழுப்பு, சிறுநீரக நோய் போன்ற தொற்றா நோய்களையும், இதேபோன்று இரத்த அழுத்த தாக்கத்திற்கு உள்ளானவர்களையும் இவ்வாறான நடைமுறையின் மூலம் குணப்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'ஹெல சுவய' மத்திய நிலையத்தில் நச்சுத்தன்மையற்ற அரிசி மற்றும் கஞ்சி வகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் போஷாக்குத்துறை வைத்தியர் திருமதி சுஜீவா விக்ரமசிங்க கூறினார்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அறிந்து கொள்ள 0112-412-943 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகத் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்துவ இலக்கமாகத் தே.அ. அ.இலக்கம்

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புச் செய்துள்ள அரச சார்பு மற்றும் தனியார் துறை ஊழியர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் நிதியத்தின் அங்கத்துவ இலக்கமாக பயன்படுத்துவதற்கு தொழிற் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான ஊழியர்கள் மற்றும் வேலைகொள்வோரின் விவரங்களை உள்ளடக்கிய வகையில் திணைக்களத்தின் கணினி தரவுகள் புதிதாக தயார் செய்யப்பட்டு வருகின்றமையுடன் புதிய அங்கத்துவ இலக்கம் இந்த வருடம் ஜூன் மாதம் முதல் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தொழில் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஏ.விமலவீர தெரிவித்துள்ளார்.

பல நிறுவனங்களில் பணியாற்றியுள்ள ஊழியர்களுக்கு ஊழியர் நம்பிக்கை நிதி அங்கத்துவ இலக்கங்கள் பல உண்டு. இதனால், நிதியத்தின் பயன்களைப் பெற்றுக்கொள்ளும் பொழுது பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்த சிரமத்தை தவிர்ப்பதற்காக இந்த ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்துவ இலக்கமாக ஊழியர்களின் தேசிய அடையாளஅட்டை இலக்கம் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து தமது பணத்தை அங்கத்தவர்கள் பெற்றுக்கொள்ளும் பொழுது ஊழியர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் சரியாக இடம்பெற்றுள்ளதா என்பதை பரிசோதிப்பதற்காக தொழிற்திணைக்களம் ஆட்பதிவுத் திணைக்களத்துடன் இணைந்து தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான உடன்படிக்கை ஒன்றுகைச் சாத்திடப்படவுள்ளது என்றும் தொழில் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டார்.

# இலங்கை அச்சுத்துறை சார்ந்தோரின் சங்கத்தின் ஏற்பாட்டில் விருது விழா




கொழும்பு, மார்ச் 20

இலங்கை அச்சுத்துறை சார்ந்தோரின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2018 விருதுவிழா கொழும்பு சக்கரில்லா ஹோட்டலில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தெற்காசிய சைபர் சமூக வர்த்தக குழுமத்தின் தலைவர் செய்தித்துறைக்கான அச்சுத்துறையில் 2 ஆம் இடத்திற்குத் தெரிவான வரையறுக்கப்பட்ட எக்ஸ்பிறஸ் செய்தி பத்திரிகைக்கு விருதை வழங்கினார்.

இந்தவிழாவில் லேக்கவுஸ் நிறுவனத்தின் வர்த்தக அச்சுப் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்திய பி.கே. ராஜித லக்பெரேராவும் விருதைப் பெற்றுக்கொண்டார்.




காலைக்கதிர் Kalaikkathir



# இலங்கையில் சீனாவின் தலையீடுகள் அதிகரிப்பு



ராகுல் காந்தி கவலை

புதுடெல்லி,மார்ச் 20

இலங்கை உள்ளிட்ட இந்தியாவின் அண்டை நாடுகளில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ளமை பற்றி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரான ராகுல் காந்தி கரிசனை எழுப்பியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில் நேற்று உரையாற்றிய அவர்,

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனிப்பட்ட முறையிலான வெளிவிவகாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்.

இது இந்தியாவின் அனைத்துலக நம்பகத்தன்மையைக் குறைத்துள்ளது.

சீனா எல்லா இடங்களிலும் தலையீடு செய்கிறது. நேபாளத்தில் டோக்லம், இலங்கை, மாலைதீவு, மியன்மார் என்று எல்லா இடங்களிலும் சீனாவின் தலையீடுகள் உள்ளன.

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் தலையீடுகள் விரிவடைந்து வருகின்றன.

இந்த நிலையில், உலக ஒழுங்கில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு மாற்றான மூன்றாவது சக்தி ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டும். என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ப)

# பணமதிப்பு நீங்கிய நோட்டுகள்; இனி அவற்றின் நிலை என்ன?

## ரிசர்வ் வங்கி விளக்கம்

பணமதிப்பு நீக்கப்பட்ட 500ரூபா மற்றும் ஆயிரம் ரூபா நோட்டுகள் என்ன செய்யப்படுகின்றன? என மத்திய ரிசர்வ் வங்கி விளக்கமளித்துள்ளது.

கறுப்பு பணம் மற்றும் கள்ள நோட்டு புழக்கத்தைத் தடுக்கும் வகையில் கடந்த 2016ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி, மத்திய அரசு அப்போது புழக்கத்தில் இருந்த 500ரூபா மற்றும் ஆயிரம் ரூபா நோட்டுகளைச் செல்லாது என அறிவித்தது. இப்படி மதிப்பு நீக்கம் செய்யப்பட்ட நோட்டுகள் வங்கிகள் மூலம் திரும்பப் பெறப்பட்டு, ரிசர்வ் வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அந்தவகையில் 15.28 லட்சம் கோடி ரூபா மதிப்பிலான மேற்படி நோட்டுகள் ரிசர்வ் வங்கிக்கு வந்தன எனக் கடந்த ஆண்டு ஒகஸ்ட் 30ஆம் திகதி ரிசர்வ் வங்கி அறிக்கை வெளியிட்டது. மேலும் இந்த நோட்டுகள் எண்ணும் பணி நடந்து வருகின்றன எனவும் அப்போது கூறியது.



இவ்வாறு ரிசர்வ் வங்கிக்கு திரும்பியுள்ள நோட்டுகள் என்ன செய்யப்படுகின்றன? என செய்தி நிறுவனம் ஒன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ரிசர்வ் வங்கியிடம் கேள்வி எழுப்பியது. இதற்குப் பதிலளித்துள்ள ரிசர்வ் வங்கி, மேற்படி நோட்டுகள் எண்ணப்பட்டு, அதன் உண்மைத்தன்மை(கள்ள நோட்டு) பற்றி ஆய்வு செய்து வருவதாக கூறியுள்ளது. இதற்காக ரிசர்வ் வங்கியின் பல்வேறு கிளைகளில் 59 நவீன எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்துள்ளது.

மேலும், எண்ணி முடிக்கப்பட்ட நோட்டுகள் சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்டு, அவற்றை பாளங்களாக மாற்றி வெளியேற்றி வருகின்றோம் எனவும் ரிசர்வ் வங்கி விளக்கம் அளித்துள்ளது. (ப)

## கணவர் நடராஜனின் நிலை கவலைக்கிடம் :

# தற்காலிக விடுப்பில் வருகின்றார் சசிகலா

கணவர் நடராஜன் நிலை கவலைக்கிடமாக உள்ளமையால் சசிகலா தற்காலிக விடுப்பில் வரவுள்ளார்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான சசிகலாவின் கணவர் நடராஜனுக்கு கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

அவரது சிறுநீரகம் மற்றும் கல்லீரல் பாதிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து சென்னையை அடுத்துள்ள பெரும்பாக்கம் குளோபல் ஆஸ்பத்திரியில் நடராஜன் அனுமதிக்கப்பட்டார்.

அவரது கல்லீரல், சிறுநீரகம் இரண்டையும் மாற்ற வேண்டும் என்கிற நிலை உருவானது. அதனைத் தொடர்ந்து தஞ்சையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இந்த இரு உறுப்புகளையும் நடராஜனுக்கு தானமாக வழங்கியிருந்தார். உடல் உறுப்பு மாற்று சத்திரசிகிச்சை மூலமாக நடராஜனுக்கு மாற்று கல்லீரல், சிறுநீரகம் ஆகியவை பொருத்தப்பட்டன.



உடல்நிலை தேறிய நிலையில் கடந்த ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி நடராஜன் வீடு திரும்பினார்.

இந்த நிலையில் நடராஜனுக்கு நேற்றுமுன்தினம் இரவு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. மூச்சுத் திணறலாலும் அவதிப்பட்டார். ஏற்கனவே சிகிச்சை பெற்ற குளோபல் மருத்துவமனையில் உடனடியாக அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் நடராஜனுக்கு வைத்தியர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

நடராஜனின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளமையால், அவருக்கு செயற்கைச் சுவாசம் பொருத்தப்பட்டு தீவிர கண்காணிப்பில் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

மீண்டும் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள கணவர் நடராஜனைப் பார்க்க சசிகலா பரோலில் வரவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ப)

# திருமணத்தில் நடனம் ஆடியதால் மனைவியைக் கொன்ற கணவன்

கொல்கத்தா,மார்ச் 20

மேற்கு வங்க மாநிலத்தில் திருமண நிகழ்ச்சியில் மனைவி நடனமாடியமையால் ஆத்திரமடைந்த கணவன், அவரைக் கொலை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர் சுபீர் நஷ்கர். இவரது மனைவி சப்னா (18). இவர்களுக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. திருமணம் ஆனது முதலே கணவன் மனைவிக்கிடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் திருமண விழா ஒன்றில் கலந்துகொள்வதற்காக சுபீரும் சப்னாவும் சென்றுள்ளனர். திருமண விழாவில் சப்னா நடனமாடியுள்ளார். இதனைப் பார்த்து ஆத்திரமடைந்த சுபீர், சப்னாவைக் கண்டித்துள்ளார். அங்கேயே கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வீட்டுக்குச் சென்ற பின்னரும் இருவரும் சண்டை போட்டுள்ளனர். சுபீரின் தாயும் சப்னாவைக் கண்டித்துள்ளார்.

ஒரு கட்டத்தில் வாக்குவாதம் முற்றவே சுபீர், சப்னாவின் கழுத்தை நெரித்துள்ளார். இதனால் மயக்கமடைந்த சப்னா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நடனம் ஆடியமைக்காகக் கணவனே மனைவியின் கழுத்தை நெரித்துக் கொன்ற சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது .(ப)

# விஷால்- கமல் திடீர் சந்திப்பு

நடிகர் கமல்ஹாசனை, தமிழ்த்திரைப்பட தயாரிப்பாளர் சங்க தலைவர் நடிகர் விஷால் நேற்றுமுன்தினம் மாலை திடீரென்று சந்தித்தார்.

மக்கள் நீதி மய்யம் என்ற கட்சியை நடிகர் கமல்ஹாசன் தொடங்கியதில் இருந்து தீவிர அரசியல் பயணத்தில் முனைப்புடன் செயற்பட்டு வருகிறார்.

இந்த பரபரப்பான அரசியல் சூழலில் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் நடிகர் கமல்ஹாசனை, நடிகர் விஷால் நேற்றுமுன்தினம் மாலை திடீரென்று சந்தித்தார். சுமார் 10 நிமிடம் இந்த சந்திப்பு நீடித்தது. கமல்ஹாசன் - விஷால் தவிர வேறு யாரும் அந்த அறைக்குள் அனுமதிக்கப்படவில்லை.

நடிகர் கமல்ஹாசன் அரசியல் பிரவேசத்துக்கு பிறகு, நடிகர் விஷால் முதல் முறையாக அவரைச் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பு அரசியல் ரீதியான சந்திப்பா? அல்லது சினிமாத்துறை சம்பந்தமான சந்திப்பா? என்று பல கேள்விகள் எழுந்தன.

இதுதொடர்பாக நடிகர் கமல்ஹாசன் மற்றும் நடிகர் விஷால் வட்டாரத்தில் கேட்டபோது, டிஜிட்டல் சேவை கட்டணம் தொடர்பாக பட அதிபர்கள் நடத்தி வரும் வேலை நிறுத்தம் தொடர்பாக நடிகர் விஷால், கமல்ஹாசனிடம் எடுத்துக் கூறினார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ரஜனியின் கட்சி கொடி தயார்; தமிழ் புத்தாண்டில் அறிமுகம்


சென்னை,மார்ச் 20

ரஜனிகாந்த் கட்சியின் பெயர், கொடி தேர்வு செய்யும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன எனவும், வருகிற தமிழ் புத்தாண்டு அன்று ரஜனிகாந்த் அதை அறிமுகம் செய்யவுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடிகர் ரஜனிகாந்த் அரசியல் அறிவிப்புக்கு பிறகு, இமயமலை பயணம் மேற்கொண்டிருக்கிறார். அவர் 15 நாள்களுக்கு மேல் அங்கு தங்குவார்.

இமயமலையில் இருந்து திரும்பியதும் ரஜனிகாந்த், அரசியல் பணிகளில் வேகம் காட்ட இருக்கிறார். அதன் முதல் அடித்தளம்தான் கட்சியின் பெயர் மற்றும் கொடி அறிமுகம் செய்வது. அந்தவகையில், ஏற்கனவே ரஜனிகாந்தின் கட்சிக்கு கொடி தேர்வு செய்யப்பட்டுவிட்டது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், கட்சியின் பெயருக்காக 10 பெயர்கள் தேர்வுக்கான பட்டியலில் உள்ளன எனவும் மக்களைக் கவரும் விதமாகவும், அரசியலில் ஒரு புதிய மாற்றத்தைத் தரும் வகையிலும் பெயர் தேர்வு செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றது எனவும் பரபரப்பாகப் பேசப்படுகிறது.




கட்சிக் கொடி மற்றும் பெயரை நடிகர் ரஜனிகாந்த் தமிழ் புத்தாண்டு தினமான ஏப்ரல் 14ஆம் திகதி அறிமுகம் செய்ய அதிகம் வாய்ப்புக்கள் உள்ளன எனக் கூறப்படுகிறது. (ப)

# ரஷ்ய ஜனாதிபதியாக மீண்டும் புடின்

மொஸ்கோ,மார்ச் 20

ரஷ்யாவின் அடுத்த அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் 75 வீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், தற்போதைய அதிபர் விளாடிமிர் புடின் 76.11 வீத வாக்குகள் பெற்று முன்னிலை வகிக்கிறார்.



ரஷ்யாவின் தற்போதைய அதிபரான விளாடிமிர் புடினின் பதவிக்காலம் முடியவுள்ள நிலையில் அடுத்த அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தத்தேர்தலில் தற்போதைய அதிபர் விளாடிமிர் புடின் உட்படஎட்டுபேர் போட்டியிட்டனர். விளாடிமிர் புடின் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகிறார். இது தவிர செர்கிபாபுரின்(ரஷ்ய அனைத்து மக்கள் யூனியன்), பவெல் குருடினின் (கம்யூனிஸ்ட் கட்சி), விளாடிமிர் சிரினோவ்ஸ்கி (லிபரல் ஜனநாயக கட்சி),




கெசனியா சோப்சாக், மேக்சிம் சுரேகின் (ரஷ்ய கம்யூனிஸ்ட்), போரிஸ் டிடோவ் (வளர்ச்சி கட்சி), கிரிகோரி யாவ்லின்ஸ்கி (யப்லோகோ) ஆகியோரும் களத்தில் உள்ளனர்.

இந்தத் தேர்தலில் புடின் எதிர்க்கட்சி வேட்பாளர்களை தோற்கடித்து எளிதில் வெற்றி பெறுவார் என ரஷ்யாவில் தனியார் நிறுவனங்கள் நடத்திய கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், தேர்தலில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன. 94.80 வீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், தற்போதைய அதிபர் விளாடிமிர் புடின் 76.56 வீத வாக்குகள் பெற்று முன்னிலை வகிக்கிறார். அதற்கு அடுத்தபடியாக கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பவெல் குருடினின் 11.92 வீத வாக்குகள் மட்டுமே பெற்றுள்ளார். இதனால் விளாடிமிர் புடின் மீண்டும் அதிபராத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பது உறுதியாகியுள்ளது.

புடின் தற்போது வரையில் 5 கோடியே 17 லட்சத்து 4 ஆயிரத்து 184 வாக்குகள் பெற்றுள்ளார். இதுகம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பெற்ற 80 லட்சத்து 50 ஆயிரத்து 978 வாக்குகளை விட 4 கோடியே 36 லட்சத்து 53 ஆயிரத்து 206 வாக்குகள் அதிகமாகும்.

## மாலைதீவில் அவசரநிலை பிரகடனம்; 139 பேர் கைது

மாலைதீவில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் நிலையில், அரசுக்கு எதிராக போராட்டம் நடத்திய 139 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாலைதீவின் அதிபர் அப்துல்லா யாமீன், அங்குள்ள 12 எம்.பிக்களை தகுதிநீக்கம் செய்திருந்தார். இதையடுத்து கைது செய்யப்பட்டுள்ள எம்.பிக்களையும் எதிர்க்கட்சித் தலைவர்களையும் விடுவிக்க வேண்டும் என்று அந்நாட்டு உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது.

தனது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காக, உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியையே, அதிபர் அப்துல்லா யாமீன் வீட்டுக்காவலில் வைத்தார். மேலும், முன்னாள் அதிபர் மவுமீன் அப்துல் கயூமையும் பொலிஸார் கைது செய்தனர்.

இதையடுத்து, கடந்த பெப்ரவரி 5ஆம் திகதி நாடு முழுவதும் அவசர நிலையைப் பிரகடனம் செய்ய அதிபர் யாமீன் உத்தரவிட்டார். இதனால், அரச அலுவலகங்கள் அனைத்தும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன. இந்த அவசர நிலை பிரகடனம் மார்ச் 25ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இந்த நிலையில், மாலைதீவில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் நிலையில், அரசுக்கு எதிராக போராட்டம் நடத்திய 139 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அந்நாட்டின் அவசரநிலை விதிகளின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. (ப)

## விமானத்தில் தந்தையின் மடியில் இருக்கப் பிடிவாதம்: அதிகாரிகளால் அனுமதி மறுப்பு!

### இறக்கி விடப்பட்டனர் இருவரும்!!

வொஷிங்டன்,மார்ச் 20

அமெரிக்காவில் விமானத்தில் பயணம் செய்யப் பயந்து அழுத குழந்தையை மடியில் வைக்கக்கூடாது என தந்தை – மகள் வலுக்கட்டாயமாக விமானத்தில் இருந்து இறக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் உள்ள மிட்வே சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அட்லாண்டா நகரை நோக்கிச் செல்லும் சவுத் வெஸ்ட் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான பயணிகள் விமானம் ஒன்று புறப்படத்தயாராக இருந்தது. இந்த விமானத்தில் ஒரு நபர் தனது மகளுடன் பயணித்தார். அவருக்கு இரண்டு வயது இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அவரது மகள் விமானத்தில் பயணம் செய்யப் போவதை நினைத்து பயந்து போயுள்ளார். இதன் காரணமாக அழுதுகொண்டிருந்த அவரது மகள், அவளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இருக்கையில் அமராமல் தந்தையின் மடி மீது அமர்ந்திருந்துள்ளார். ஆனால் இதற்கு விமான அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

குழந்தை அழக்கூடாது எனவும், தனி இருக்கையில் அமர்ந்துதான் பயணம் செய்ய வேண்டும் எனவும் கண்டிப்புடன் கூறியுள்ளனர். அவ்வாறு இல்லையெனில் விமானத்தை விட்டு இறங்கும்படியும் கூறியுள்ளனர்.

இதனால் வேறு வழியின்றி தந்தையும் மகளும் விமானத்தை விட்டு இறங்கியுள்ளனர். இது தொடர்பான வீடியோவை ஜூலியட்



பகுதியைச் சேர்ந்த அலெக்சிஸ் ஆர்ம்ஸ்டிராங் என்பவர் இணையத்தளத்தில் பதிவு செய்துள்ளார். இந்தச் சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ப)

## பேஸ்புக் பதிவால் சர்ச்சை; கவிழும் நோர்வே அரசு?

நோர்வே நாட்டில் எதிர்க்கட்சி பற்றி பேஸ்புக்கில் பெண் கருத்து பதிவு செய்திருந்த நிலையில் அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடான நோர்வேயில் பிரதமர் எர்னா சொல்பெர்க் தலைமையில் கிறிஸ்தவ ஜன நாயக கட்சியின் ஆட்சி நடக்கிறது.

இந்த நிலையில் அரசியல் அங்கம் வகிக்கும் நீதித்துறை பெண் அமைச்சர் சில்வி லிஸ்தாக் பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி பற்றிச் சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்தார்.

அதில் 2011ஆம் ஆண்டில் தொழிலாளர் கட்சியின் அன்டர்ஸ் பெக்ரிங் பிரிவிக் தலைமையில் இருந்த ஆட்சி தீவிரவாதிகள் மீதான தாக்குதல் என்ற பெயரால் இளைஞர்கள் முகாமின் மீது தாக்குதல் நடத்தியது எனத் தெரிவித்திருந்தார்.

இது தொழிலாளர் கட்சிக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. அதனால் ஏற்பட்ட சர்ச்சையை தொடர்ந்து அமைச்சர் சில்வி லிஸ்தாக் பேஸ்புக்கில் பதிவு செய்திருந்த தனது கருத்தை நீக்கிவிட்டார்.

இருந்தும் தொழிலாளர் கட்சியின் கோபம் தணியவில்லை. நீதித்துறை அமைச்சர் சில்வி லிஸ்தாக் மீது நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்துள்ளது.

இப்பிரேரணை வெற்றி பெற்றால் அரசு கவிழும் அபாயத்தில் உள்ளது. (ப)

## பிலிப்பைன்ஸ் ஹோட்டலில் தீ விபத்து; நால்வர் சாவு



மணிலா,மார்ச் 20

பிலிப்பைன்ஸ் தலைநகரமான மணிலாவில் உள்ள ஹோட்டலில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு பேர் உடல் கருகி, உயிரிழந்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவில் மணிலா பவிலியன் என்னும் சூதாட்ட விடுதியுடன்கூடிய பிரபல ஹோட்டல் அமைந்துள்ளது. இந்த ஹோட்டலில் நேற்றுத் திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது. இதுபற்றிய தகவல் அறிந்ததும் தீயணைப்பு மற்றும் மீட்புக்குழுவினர் ஹெலிகொப்டர்களுடன் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

கடும் புகை மூட்டத்துக்கு இடையே அங்கு சிக்கித் தவித்த சுமார் 300 பேரை அவர்கள் பத்திரமாக வெளியேற்றினர். இந்த விபத்தில் ஹோட்டல் பணியாளர்கள் நான்கு பேர் தீயில் கருகி உயிரிழந்தனர். சுமார் 20 பேர் மூச்சுத்திணறல் மற்றும் தீக்காயங்களுடன் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ப)

## ஸிம்பாப்வே அதிபர் தேர்தல் ஜுலையில்

ஹராரே,மார்ச்20

ரொபேர்ட் முகாபேவின் ராஜினாமாவுக்குப் பின் ஸிம்பாப்வே அதிபர் பதவிக்கு வரும் ஜூலை மாதம் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸிம்பாப்வே நாட்டில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற இராணுவப் புரட்சியின் மூலம் அதிபர் ரொபேர்ட் முகாபே பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.



இடைக்கால அதிபராக எமர்சன் மன்னங்காவா பொறுப்பேற்றுக் கொண்டார். இந்த நிலையில், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபரை பதவியில் அமர்த்துவது தொடர்பாக தென்னாபிரிக்க அதிபர் சிரில் ராம்போ சாவுடன் ஸிம்பாப்வே தற்காலிக அதிபர் எமர்சன் நேற்று முன்தினம் தீவிர ஆலோசனை நடத்தினார்.

இதனையடுத்து, ஸிம்பாப்வே அதிபர் பதவிக்கு வரும் ஜூலை மாதம் தேர்தல் நடைபெறும் என அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய பின்னர் தேர்தல் திகதி அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் எமர்சன் மன்னங்காவா தெரிவித்துள்ளார். (ப)

# கொழும்பில் நடந்த ஆட்டத்தில் களேபரம் பங்களாதேஷ் வீரர்களுக்கு அபராதம்

கொழும்பு, மார்ச் 19

இலங்கைக்கு எதிரான கடைசி லீக்கில் தகராறில்ஈடுபட்ட பங்களாதேஷ்வீரர்களான அணித்தலைவர் ஷகிப் அல்–ஹசன், நுருல்ஹசன்ஆகியோருக்குசர்வதேசகவுன்ஸின் (ஐ.சி.சி.) அபராதம் விதித்துள்ளது.



**பவுன்ஸரால் வெடித்த சலசலப்பு**

முத்தரப்பு 20 ஓவர் கிரிக்கெட் தொடரில் கொழும்பில் வெள்ளி இரவு நடந்த கடைசி லீக் ஆட்டத்தில்பங்களாதேஷ் அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை பதம் பார்த்து இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இதில் இலங்கை நிர்ணயித்த 160 ஓட்டங்கள் இலக்கை நோக்கி ஆடிய பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இறுதி ஓவரை வேகப்பந்து வீச்சாளர் உதனா வீசினார்.

முதல் பந்தை பவுன்ஸராக வீசிய உதனா, அடுத்த பந்தையும் தோள்பட்டைக்கு மேலாக எகிறும் வகையில் பவுன்ஸராக வீசினார். 20 ஓவர் போட்டியில் ஓவருக்கு ஒரு பவுன்ஸர் மட்டுமே வீச அனுமதி உண்டு. அதே ஓவரில் மறுபடியும் பவுன்ஸர் வீசினால், நோ–போலாக அறிவிக்கப்பட்டு 'பிரீஹிட்' வழங்கப்படும். ஆனால் நடுவர் அதைச் செய்யவில்லை. களத்தில் நின்ற பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர் மக்முதுல்லா நோ–பால் வழங்கும்படி நடுவரிடம் வாதிட்டார். இதற்கிடையே தண்ணீர்ப் போத்தல் எடுத்து வந்த பங்களாதேஷ் மாற்று ஆட்டக்காரர் நூருல் ஹசன், இலங்கை அணித் தலைவர் திசரா பெரேராவை வம்புக்கு இழுத்தார். அவரை நோக்கி சரமாரியாக வசைபொழிந்தார். பெரேராவும் அவரை திட்டினார். பிறகு மற்ற வீரர்கள் இருவ ரையும் விலக்கி விட்டனர்.

**ஷகிப் அல்–ஹசன் கொதிப்பு**

வெளியே உட்கார்ந்து இதை கவனித்துக்கொண்டிருந்த பங்களாதேஷ் அணித் தலைவர் ஷகிப் அல்–ஹசன் கடும் கோபத்திற்கு உள்ளானார். மாற்று நடுவரிடம் வாக்கு வாதம் செய்த அவர் எல்லைக்கோடு அருகே வந்து, பெவிலியன் திரும்பும்படி தங்களது துடுப்பாட்ட வீரர்களை நோக்கி சைகை காட்டினார். இரு அணி வீரர்களும் உணர்ச்சிப் பிழம்பாய் வரிந்துகட்டி நிற்க, களத்தில் உச்சக் கட்டப் பதற்றம் நிலவியது. இதனால் ஆட்டமும் சிறிது நேரம் நிறுத்தப்பட்டது.

நடுவர்கள் சமாதானப்படுத்திய பிறகு ஆட்டம் தொடர்ந்து நடந்தது. அடுத்த மூன்று பந்துகளில் 4, 2, 6 வீத ஓட்டங்கள் விரட்டிய மக்முதுல்லா (ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்கள் ஒரு பந்தை மீதம் வைத்து தங்கள் அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

வெற்றி பெற்றதும் மைதானத்திற்குள் ஓடி வந்த பங்களாதேஷ் அணியினர், தங்களது புதிய ஸ்டைலான பாம்பு நடனம் ஆடி கொண்டாடினர். இந்த பரபரப்புக்கு மத்தியில் பங்களாதேஷ் வீரர்களின் ஓய்வறையின் கண்ணாடிக் கதவு அடித்து நொறுக்கப்பட்டது.

**ஐ.சி.சி. நடவடிக்கை**

இறுதி கட்டத்தில் எதிர்பாராமல் நடந்த குழப்பங்கள் குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் (ஐ.சி.சி.) போட்டி நடுவர் கிறிஸ் பிராட் கடந்த சனிக்கிழமை விசாரணை நடத்தினார். நடத்தை விதி முறையை மீறினர் என பங்களாதேஷ் அணித்தலைவர் ஷகிப் அல்–ஹசன், மாற்று ஆட் டக்காரர் நூருல் ஹசன் ஆகியோருக்கு போட்டி கட்டணத்தில் இருந்து தலா 25 சதவீதம் அபராதமாக விதிக் கப்பட்டது. அது மட்டுமின்றி தலா ஒருதகுதி இழப்புபுள்ளியும்வழங்கப்பட்டது.

ஐ.சி.சி. வெளியிட்டுள்ள அறிக்கையில், 'எந்த மாதிரியான போட்டியிலும் வீரர்கள் இது போன்று நடந்து கொள்வதை யாரும் விரும்புவதில்லை. இந்தப் போட்டி வெற்றி வாய்ப்பு யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் உணர்ச்சிகரமான கட்டத்தில் இருந்ததை புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் ஷகிப் அல்–ஹசன், நூருல் ஹசன் ஆகியோர் நடந்து கொண்ட விதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்களும் தவறை ஒப்புக் கொண்டனர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**கண்ணாடியை உடைத்தது யார்?**

இதற்கிடையே, ஓய்வறையின் கண்ணாடிக் கதவைப் பங்களாதேஷ் வீரர் ஒருவரே உடைத்ததாக சர்ச்சை கிளம்பியுள்ளது. பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் அதற்குரிய இழப்பீட்டு தொகையை இலங்கை கிரிக்கெட் சபைக்கு வழங்க பங்களாதேஷ் அணி நிர்வாகம் ஒப்புக் கொண்டதாகத் தெரிகிறது.

## மே.இந்தியத் தீவுகள் – இந்தியா சென்னையில் நவம்பரில் ரி – 20



சென்னை சேப்பாக்கத்தில் இந்தியா – மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான 2ஆவது ரி 20 போட்டி நவம்பர் மாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி இந்த வருடத்தில் சொந்த மண்ணில் விளையாடும் போட்டிகள் மற்றும் போட்டிகள் நடைபெறும் இடங்களை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ) நேற்று அறிவித்துள்ளது.

அதன்படி இந்தியா ஆப்கானிஸ்தான் உடன் முதன்முறையாக டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடுகிறது. இந்த போட்டி ஜூன் மாதம் நடக்கும்.

அதன்பின் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக விளையாடுகிறது. இதில் ஒரு போட்டி பகல் – இரவு ஆட்டமாக நடைபெற இருக்கிறது. இந்த பகல் இரவு ஆட்டம் ஐதராபாத் அல்லது ராஜ்கோட்டில் நடைபெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பின் மேற்கிந்தியத் தீவுகளுடன் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இந்தியா விளையாடுகிறது. இந்த போட்டிகள் மும்பை, கவுகாத்தி, கொச்சி, இந்தூர் மற்றும் புனேயில் நடக்கவிருக்கின்றன.

பின்னர் மூன்று போட்டிகள் கொண்ட ரி 20 கிரிக்கெட் தொடரில் விளையாடுகிறது. முதல் போட்டி நவம்பர் 4ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறும். அதன்பின் 2ஆவது ஆட்டம் சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற இருக்கிறது. 3ஆவது ஆட்டம் கான்பூரில் நடக்கிறது. இதற்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ரி20 தொடர் முடிவடைந்த உடன் இந்தியா ஆஸ்திரேலியாவுக்குச் செல்கிறது.

## பங்களாதேஷ் வீரர்களின் செயற்பாடு ஏற்கவே முடியாது என்கிறார் திலங்க



இலங்கையில் இடம்பெறும் முக்கோண ரி – 20 தொடரில் இலங்கைக்கு எதிரான போட்டியில் பங்களாதேஷ் வீரர்கள் நடந்து கொண்ட விதம் கவலைக்குரியது ஏற்றுக்கொள்ள முடியாதது. – என இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

நடுவரின் முடிவிற்கு எதிராக இவ்வாறு நடந்து கொள்கின்றமை கவலைக்குரியது; ஏற்றுக்கொள்ள முடியாதது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பங்களாதேஷ் அணியினர் மிகவும் கீழ்த்தரமான முறையில் நடந்துகொண்டனர் என இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரியவும் குற்றம் சாட்டியுள்ளார்

அவர்கள் தங்களின் அறையை உடைத்து சேதப்படுத்தியபடத்துடன் ஜெயசூரிய இந்தக்கருத்தைடுவிட்டரில் பதிவு செய்துள்ளார்.

எனினும் சில நிமிடங்களின் பின்னர் அவர் அதனை நீக்கியுள்ளார் என்று கூறப்பட்டது.

## ரபாடாவை இடைநிறுத்தினால் தென்னாபிரிக்காவுக்கு பாதிப்பு

### பெரும் பின்னடைவு என்கிறார் நிதினி



பந்து வீச்சாளர் ரபாடா கேப்டவுன் டெஸ்டில் இடம்பெறா விட்டால் தென்னாபிரிக்கா 5 வேகப்பந்து வீச்சாளர்களை இழப்பதற்கு அது சமனாகும் என நிதினி தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா–ஆஸ்திரேலியா இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே முடிந்துள்ள இரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியை ருசித்துள்ளன.

2ஆவது போட்டியின்போது தென்னாபிரிக்கா வேகப்பந்து வீச்சாளர் ரபாடா ஆஸ்திரேலியா அணித் தலைவர் ஸ்மித்துடன் மோதலில் ஈடுபட்டார். இதனால் இரண்டு டெஸ்ட்களில் விளையாட அவருக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையை எதிர்த்து ரபாடா மேன்முறையீடு செய்துள்ளார். இதன் மீதான விசாரணை நேற்று திங்கட்கிழமை தொடங்கியது.

இந்த விசாரணையில் அவரது தண்டனை குறைக்கப்பட்டால் கேப்டவுன் டெஸ்டில் விளையாட வாய்ப்பு கிடைக்கும். ஒருவேளை ரபாடா தென்னாபிரிக்கா அணியில் இடம் பெறவில்லை என்றால், அது ஐந்து வேகப் பந்து வீச்சாளர்களை இழந்தமைக்குச் சமம் என முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் நிதினி கூறியுள்ளார்.

ரபாடா தடை குறித்து நிதினி கூறுகையில் –

"ரபாடா எங்கள் மண்ணின் மைந்தன். நாங்கள் அவரை அடுத்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இழந்தால், அது அணிக்கு மிகப்பெரிய இடைவெளியாகும். அவரை இழப்பது ஐந்து பந்து வீச்சாளர்களை இழந்தமைக்குச் சமம்.

போர்ட் எலிசபெத்தில் 11 விக்கெட்டுக்கள் சாய்த்துளளார். இது பெரிய இடைவெளியாக இருக்கும். இதை ஐந்து பந்து வீச்சாளர்களை கொண்டு தான் நிரப்ப முடியும். அவர் அணியில் இல்லாவிடில், ஒட்டுமொத்த கப்பலும் நீரில் மூழ்கி கொண்டிருப்பது போன்றது. யாராலும் அந்த கப்பல் கவிழ்வதை தடுத்து மீண்டும் பயணம் செய்ய வைக்க இயலாது. வேகப்பந்து வீச்சின் தலைவர் அவர்." – என்றார்.



உலகக் கிண்ண தகுதிச் சுற்று:

# ஸ்கொட்லாந்தை வீழ்த்தி இறுதிக்கு அயர்லாந்து



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான தகுதிச்சுற்று ஆட்டத்தில் அயர்லாந்து - ஸ்கொட்லாந்து அணிகள் நேற்றுமுன்தினம் மோதின. இதில் அயர்லாந்து அணி வெற்றி பெற்றது.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான தகுதிச் சுற்று ஸிம்பாப்வேயில் நடந்து வருகிறது. இதில் ஹராரேவில் நேற்றுமுன்தினம் நடந்த சூப்பர் சிக்ஸ் சுற்று ஆட்டம் ஒன்றில் அயர்லாந்து - ஸ்கொட்லாந்து அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 271 ஓட்டங்கள் குவித்தது. அன்ரி பால்பிர்னி (105 ஓட்டங்கள்) சதம் அடித்தார். தொடர்ந்து ஆடிய ஸ்கொட்லாந்து அணி 47.4 ஓவர்களில் 246 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. இதன் மூலம் 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி, இறுதிப் போட்டி வாய்ப்பையும் தக்கவைத்துக் கொண்டது.

இண்டியன் வெல்ஸ் டெனிஸ் இறுதி:

## பெடரரை வீழ்த்திய டெல் போட்ரோ

இண்டியன் வெல்ஸ் டென்னிஸ் இறுதிப்போட்டியில் முதல்தர வீரர் ரோஜர் பெடரரை, வீழ்த்திய டெல் போட்ரோ சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவின் இண்டியன் வெல்ஸ் நகரில் இண்டியன்வெல்ஸ்டெனிஸ்(பி.என்.பி. பாரிபொஸ் ஓபன்) நடைபெற்று வருகிறது.

இத்தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் சுவிற்ஸலாந்து வீரர் ரோஜர் பெடரரும், ஆறாவது இடத்தில் இருக்கும் ஆர்ஜென்டினாவின் ஜுவான் டெல் போட்ரோவும் மோதினர். விறுவிறுப்பாக நடைபெற்ற



இப்போட்டியின் முதல் செட்டை டெல் போட்ரோ 6:4 எனக் கைப்பற்றினார். இரண்டாவது செட்டை 7:6 (10:8) எனப் பெடரர் போராடிக் கைப்பற்றினார்.

வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதி செட்டில் இருவரும் மாறி மாறி புள்ளிகள் எடுத்தனர். இறுதியில் 7:6 (7-2) என மூன்றாவது செட்டை கைப்பற்றிய டெல் போட்ரோ, 6:4, 6:7 (8:10), 7:6 (7:2) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றார்.

வதோதரா ஒருநாள் போட்டி:

## இந்தியாவை வெள்ளையடித்த ஆஸ்திரேலிய மகளிர் அணி




பெண்கள் கிரிக்கெட்டில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் இந்தியா தோல்வியடைந்தது.

இந்தியா - ஆஸ்திரேலியா பெண்கள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் வதோதராவில் நடைபெற்று வந்தது. ஏற்கனவே நடைபெற்று முடிந்த முதல் இரண்டு போட்டிகளில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்ற நிலையில், 3ஆவது மற்றும் கடைசி போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

ஆஸ்திரேலியா 50 ஓவரில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 332 ஓட்டங்கள் குவித்தது. இந்திய வீராங்கனைகள் 8 பேர் பந்து வீசினார்கள்.

பின்னர் 333 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய வீராங்கனைகள் களம் இறங்கினார்கள். தொடக்க வீராங்கனைகளாக களம் இறங்கிய ஜெமிமா ரோட்ரிக்ஸ் 41 பந்தில் 42 ஓட்டங்களும், ஸ்மிரித் மந்தனா 42 பந்தில் 52 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அதன்பின் வந்த வீராங்கனைகள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தமையால் இந்தியா 44.4 ஓவரில் 235 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இதனால் ஆஸ்திரேலியா 97 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## இந்திய ரசிகரை தூக்கிக் கொண்டு மைதானத்தில் ஓடிய இலங்கை ரசிகர்

பங்களாதேஷ் அணிக்கெதிரான வெற்றிக்குப் பின் இந்திய ரசிகரை, இலங்கை ரசிகர் தூக்கிக் கொண்டு ஓடியமை தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

இலங்கையில் முத்தரப்பு ரி - 20 தொடரின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இத்தொடரில் இலங்கை அணியை இரண்டு முறை வீழ்த்தி (பாம்பு) ஆட்டம் போட்ட பங்களாதேஷ் அணி, இந்திய அணியை சந்தித்தது.

இந்த நிலையில் இந்த இறுதிப் போட்டியில் ஒரு கட்டத்தில் பங்களாதேஷ் அணி வெற்றி பெறும் நிலையில் இருந்தது.

அப்போது இந்திய அணி வீரரான தினேஷ் கார்த்திக் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி, கடைசி பந்தில் 5 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்றபோது, அற்புதமாக சிக்ஸர் அடித்து இந்திய அணிக்கு திரில் வெற்றியைத் தேடிக் கொடுத்தார்.

இந்த வெற்றியை கொண்டாடும் வகையில் இந்திய வீரர்கள் மைதானத்தில் வலம் வந்தனர். அந்த நேரத்தின் போது இந்திய ரசிகர் ஒருவரை, இலங்கை ரசிகர் தூக்கிக் கொண்டு ஓடினார்.

அவர்கள் இருவரிடமும் இரு நாட்டின் கொடிகள் இருந்தன. இந்த உணர்ச்சிபூர்வமான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.



## பகலிரவு டெஸ்ட் போட்டிக்கு அனுமதி அளித்த பி.சி.சி.ஐ.

இந்திய கிரிக்கெட் அணி, பகல் - இரவு டெஸ்ட் போட்டியில் விளையாட பி.சி.சி.ஐ. அனுமதி அளித்துள்ளது.

மும்பையில், இந்திய கிரிக்கெட் அணி பங்கேற்கும் தொடர்களை நிர்ணயிக்கும் பி.சி.சி.ஐ. அமைப்பு கூட்டம் நடைபெற்றது. இதில் தொழில் நுட்பப் பிரிவு தலைவர் சவுரவ் கங்குலி, தற்காலிக செயலாளர் அமிதாப் சௌத்ரி, நிர்வாக பொது மேலாளர்கள் சபா கரீம் உள்ளிட்டோர் பங்குபற்றினர்.

இந்தக் கூட்டத்தின் முடிவில், இந்தியாவில் முதல்முறையாக பகல் - இரவு டெஸ்ட் போட்டிகளை நடத்த பி.சி.சி.ஐ. அனுமதி அளித்துள்ளது . இதனைத் தொடர்ந்து, மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக, ஒக்ரோபர் மாதம் பகல் - இரவு டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலீஷ் பிரீமியர் லீக்:

## மொகமது சாலா அதிரடி லிவர்பூல் வெற்றிவாகை




இங்கிலீஷ் பிரீமியர் லீக் உதைபந்தில் லிவர்பூல் வீரர் மொகமது சாலா நான்கு கோல்கள் அடித்து அசத்தியுள்ளார்.

இங்கிலீஷ் பிரீமியர் லீக் உதைபந்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் லிவர்பூல் - வாட்போர்ட் அணிகள் மோதின. லிவர்பூல் அணிக்குச் சொந்தமான அன்பீல்ட் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. சொந்த மைதானத்தில் லிவர்பூல் அணி வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். குறிப்பாக முன்னணி வீரர் சாலா அபாரமாக ஆடினார்.

ஆட்டத்தின் 4ஆவது நிமிடத்தில் சாடியோ மானே கொடுத்த பந்தை மொகமது சாலா கோலாக மாற்றினார். 43 ஆவது நிமிடத்தில் அன்ட்ரிவ் ராபர்ட்சன் கொடுத்த பந்தை கோலாக மாற்றினார். இதனால் முதல்பாதி நேரத்தில் லிவர்பூல் 2:0 என முன்னிலை பெற்றது.

2ஆவது பாதி நேரத்திலும் அந்த அணியே ஆதிக்கம் செலுத்தியது. 49ஆவது நிமிடத்தில் மொகமது சாலா கொடுத்த பந்தை ரொபர்ட்டோ பேர் மினோ கோலாக மாற்றினார். அதன்பின் 77 மற்றும் 85 ஆவது நிமிடத்தில் மொகமது சாலா கோல் அடித்தார். இதனால் லிவர்பூல் அணி 5:0 என வெற்றி பெற்றது.

மொகமது சாலா நான்கு கோல்கள் அடித்தமையுடன் ஒரு கோல் அடிக்க துணையாகவும் இருந்தார். இந்த வெற்றியின் மூலம் 63 புள்ளிகளுடன் லிவர்பூல் 3ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

(ப)

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) லூரியின் பழைய மாணவர்கள் சிலரும் ஒன்று சேர்ந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

போராட்டத்தின் அதி உச்ச வெளிப்பாடாக அவர்கள் ஜனாதிபதியைக் கடுமையாகத் திட்டித் தீர்த்தனர்.

பதாகைகளைத் தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டக் காரர்கள் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகில் பெரும் எண்ணிக்கையில் திரண்டமையால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து விரட்ட முற்பட்டபோதும் அது முடியாமல் போகவே அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடத்தைத் திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அதி உச்சப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

அவரது வருகைக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்கள் சிலர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

அந்தக் கல்லூரியின் முன்னாள் அதிபராக இருந்த பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதியுத்தத்தின்போது இராணுவத்திடம் சரணடைந்து காணாமற்போயிருந்தார். அது தொடர்பில் இதுவரை அரசு உரிய பதிலை வழங்கவில்லை.

இதனைக் கண்டித்தும் இதற்கான பொறுப்பைக் கூறாமல் ஜனாதிபதி தமது பாடசாலைக்கு வருவதை அனுமதிக்க முடியாது என வலியுறுத்தியும் பழைய மாணவர்கள் சிலர் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதேவேளை, காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாகவும் வடக்கு – கிழக்கில் போராட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில், அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனைக் கண்டித்தும் தமது உறவுகளை மீட்டுத் தரக் கோரியும் வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலிருந்தும் வருகை தந்த காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களும் நேற்றுக் கறுப்புக் கொடி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஜனாதிபதி வருகை தரும் வேளை சென். பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக ஒன்றுதிரண்ட பாடசாலைப் பழைய மாணவர்களையும் காணாமற்போனோரின் உறவினர்களையும் அங்கு போராட்டம் நடத்துவதற்குப் பொலிஸார் அனுமதிக்கவில்லை. பாடசாலை செல்லும் வாயில்களில் பொலிஸ் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டன.

இதனையடுத்து, சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குச் செல்லும் பிரதான நுழைவாயிலில் யாழ். பிரதான வீதியில் ஒன்று திரண்டு கவனவீர்ப்புப் போராட்டமொன்றை அவர்கள் முன்னெடுத்திருந்தனர். இதன்போது அங்கு பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டுப் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கறுப்புக் கொடிகளை ஏந்திப் போராட்டக்காரர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இவ்வாறு அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்த போது, அவ் வீதி வழியாக வந்த ஜனாதிபதி போராட்டக்காரர்களைக் கண்டும் காணாது சென்றார்.

இதன் பின்னர் 'ஜனாதிபதியே வெளியேறு', 'அரசியல் கைதிகளை விடுதலை செய்', 'சரணடைந்த பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் எங்கே', 'காணாமலாக்கப்பட்டவர்களுக்குப் பதில் கூறு' உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு வந்த பொலிஸ் அதிகாரி ஒருவர், ஜனாதிபதியுடன் சந்தித்துப் பேசப் போராட்டக்காரர்களை வருமாறு கோரி மூன்று பேரை அழைத்துச் சென்றிருந்தார்.

பாடசாலை நிகழ்வின் முடிவில் ஜனாதிபதி காணாமற்போனோரின் உறவினர்களைச் சந்திப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அமைதியாகத் தமது போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்திருந்தனர். ஆயினும், பேச்சுக்கு அழைத்துச் செல்லப்பட்ட காணாமற்போனோரின் உறவினர்களை ஜனாதிபதி சந்திக்கவில்லை. ஜனாதிபதியைச் சந்திக்கச்சென்றவர்கள் திரும்பி வந்து அவர் தம்மைச் சந்திக்க மறுத்துவிட்டார் எனத் தெரிவித்தனர்.

இதனை அடுத்து அவர்கள் ஜனாதிபதியைத் திரும்பிச் செல்லவிடாது வீதியின் குறுக்காகப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் கடுமையான முரண்பாடு ஏற்பட்டது.

ஜனாதிபதி திரும்பிச் செல்லும்போது அவரைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் போராட்டக்காரர்கள் வீதிக்கு குறுக்கே வந்தனர். ஆயினும் ஜனாதிபதி போராட்டத்தைக் கணக்கில் எடுக்காமல் வேகமாகச் சென்றுவிட்டார்.

இதேவேளை, இந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட எவருமே தம்மைக் கண்டுகொள்ளவில்லை எனக் காணாமற்போனோரின் உறவினர்கள் குற்றஞ்சாட்டினர். (ஐ–7)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) களில் கலந்து கொள்வதற்காக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

இந்த நிலையிலேயே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இந்தப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்ட உறவுகள், கூட்டமைப்பினருக்கு எதிராகக் கோசங்கள் எழுப்பினர்.

தமது பிள்ளைகளின் நிலைமைகள் தொடர்பில் அக்கறையில்லாமல் பதவி, சுகபோகங்களை அனுபவித்துவரும் கூட்டமைப்பினர் உடனடியாகத் தமது பதவிகளிலிருந்து விலக வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் நிலைமைகள் தொடர்பில் உரிய பதிலை விரைவில் வழங்கத் தவறும் பட்சத்தில் வடக்கிலுள்ள சகல கூட்டமைப்பு அலுவலகங்களையும் முற்றுகையிட்டுப் போராட்டம் போவதாகவும் உறவுகள் எச்சரிக்கை விடுத்தனர். (ஐ–7)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளிலும் கட்டாயம் கலந்து கொண்டு வருகின்றேன்.

– இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் மூன்று கோடி ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப மையத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

நான் பல்வேறு வேலைப் பளுவுக்கு மத்தியிலும் இந்தப் பாடசாலைக்கும் வடக்கு மக்களுக்கும் கௌரவத்தை அளிப்பதற்காகவே இங்கு வந்திருக்கின்றேன். இங்கு என் நண்பரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன் பேசுகின்றபோது, வடக்கு மக்கள் எனக்கு அளித்த ஆதரவைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அந்தச் செய்நன்றி மறவாத காரணத்தால்தான் வடக்கில் நடக்கின்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் நான் கட்டாயம் கலந்து கொண்டு வருகின்றேன்.

எங்களுக்குப் பலவிதமான அரசியல் பொருளதார, சமூகப் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. அந்தப் பிரச்சினைகளை நாங்கள் தீர்த்துக் கொள்ளவேண்டும். அதற்கு அப்பால் செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் எங்களுக்கு இருக்கிறது. அதுதான் மனிதாபிமானம் என்ற இறுக்கம் நெருக்கம் ஆகும்.

மனிதர் மீது அன்பு காட்டுவதும் மனிதர்களுக்குச் சேவை செய்வதும்தான் மனிதர்கள் மத்தியில் இருக்கக் கூடிய மிக முக்கியமான கடமை. அந்தக் கொள்கை எனக்கு இருக்கின்ற காரணத்தினால் தான் நான் இன்று இந்த நிகழ்ச்சியில் மிகச் சந்தோசமாகக் கலந்துகொள்கின்றேன். இந்தக் கல்லூரியில் நடைபெறும் நிகழ்வில் எனக்குக் கலந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தமை சந்தோசமாக இருக்கிறது.

உலகத்தில் எந்தெந்த நாடுகளில் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தாலும் அந்தந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு நல்ல கல்வியை வழங்கவேண்டும். அவ்வாறு கல்வி மேம்பட – புத்திஜீவிகள் அதிகரிக்க அந்த நாட்டில் பிரச்சினைகள் தீர்ந்துவிடும். பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் ஒவ்வொரு நாடுகளிலும் ஏற்படுவதற்குக் காரணம் அந்த நாடுகளிலே கல்வி கற்றவர்கள் இல்லாததுதான். எனவே கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டியதுதான் அரசினதும் ஏனையோருடையதும் முக்கியமான பொறுப்பாக இருக்க வேண்டும். இந்தப் பாடசாலை தனியார் பாடசாலை. இருந்தாலும் இந்தப் பாடசாலைக்கு நீச்சல் தடாகம் இல்லை என்று கூறப்பட்டிருக்கின்ற நிலையில் அதற்கு உதவி செய்ய நான் எதிர்பார்க்கிறேன். அரசாங்கமோ தனியாரோ கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

எமது நாட்டிலே ஆரம்பக் கல்வியிலிருந்து இலவசக் கல்வியைத்தான் வழங்கி வருகின்றோம். அவ்வாறு ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக் கல்வி வரை இலவசக் கல்வி வேறு எங்கும் வழங்கப்படுவதில்லை. இங்கு நாம் இலவசக் கல்வியை, சுகாதார சேவையை, ஏழை மக்களுக்கு நிவாரணங்களை வழங்குகிறோம். முன்னேற்றமடைந்திருக்கின்ற நாடுகள் பல எங்களைப் போன்று இலவசமாக எதனையும் வழங்குவதில்லை. அதனால் அவர்கள் முன்னேற்றமடைந்திருந்தாலும் அதற்காக நாங்கள் இலவசமாக வழங்குவதை நிறுத்தப் போவதில்லை. நாங்கள் மிகப் பொறுப்புடன் புதிய கல்வித் திட்டத்துடன் புதிய கல்விகளை வழங்க இருக்கின்றோம்.

பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு இன்று நியமனங்களை வழங்குகின்றோம். அதே நேரம் பட்டம் பெற்றவர்கள் பலர் வேலையில்லாமல் நாட்டின் பல பாகங்களிலும் இருக்கின்றார்கள். அவர்கள் தமக்கு நியமனங்களை வழங்குமாறு பலவிதமான போராட்டங்களை மேற்கொள்கின்றனர். அது அவர்களுடைய தவறு அல்ல. அது கல்வி முறையில் உள்ள தவறு. கல்விக் கொள்கையில் உள்ள தவறு. நாங்கள் அரசு என்ற வகையில் அதனைச் சீர்படுத்தித் திருத்திக் கொண்டு செல்கிறோம். புதிய கல்வி முறையின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று பட்டம் பெற்றவர்கள் வேலை கேட்டுப் போராடும் நிலைமையை இல்லாமல் செய்யும் செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். ஆகவே, நாம் பொறுப்புடன் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும்.

இங்கு எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் தமது உரைகளில் பல விடயங்களைக் குறிப்பிட்டிருக்கின்றனர். அவர்கள் கூறிய விடயங்களை நாங்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் கையாள்வோம். இந்த நாட்டிலே அரசியல் ரீதியாக ஏற்பட்டுள்ள முறுகல் நிலை பற்றி உங்களுக்குத் தெரியும். நாட்டின் மீது அன்பு செலுத்தும் அரசியல்வாதிகள் எவ்வளவுபேர் இருக்கின்றார்கள் என்பது எங்களுக்கொரு பிரச்சினையாக இருக்கின்றது.

அரசியல் ஆதாயம் பெறுவதற்காகச் சிலர் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களைத் தயாரித்து வைத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த நாட்டில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்ற அவசியமில்லை. அவர்களுக்கு இந்த நாட்டில் இருக்கக்கூடிய தேசிய ஒற்றுமையை பலப்படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை. இந்த நாட்டு மக்கள் மத்தியில் நிரந்தரமானதொரு ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை. அவர்களுடைய நிகழ்ச்சி நிரலின்படி எப்படியாவது ஆட்சிக்கு வரவேண்டும் என்பது தான். இதற்கு ஏமாந்து போனவர்களும் சிலர் இருக்கின்றார்கள்.

எனவே நாட்டினுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மிகவும் நியாயமான முறையில் சிந்திக்கக் கூடியவர்களின் தேவை இருக்கின்றது. எனவே, இந்த நாட்டில் யார் அடுத்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகப் போகின்றார்கள் என்பது அல்ல மக்கள் பிரச்சினை. சிலர் நீண்டகாலமாக இப்படிச் செயற்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு சிலர் நான் பார்த்ததில் நாட்டின் மீது அன்பு செலுத்திச் செயற்பட்டு வருகின்றார்கள்.

கடந்த ஐம்பது, அறுபது வருட காலமாக இந்த நாட்டின் அரசியலைப் பார்த்தால் அது தான் தெட்டத் தெளிவாக எங்களுக்குத் தெரிகிறது. நாட்டின் மீது அன்பு செலுத்தாது அரசியல் ஆதாயத்துக்காகச் செயற்படுகின்றவர்களை மக்கள் சரியாக இணங்கண்டு கொள்ள வேண்டும்.

கடந்த 2015 ஆம் ஆண்டு இந்த நாட்டு மக்கள் எனக்கு நல்லதொரு வெற்றியைப் பெற்றுத் தந்தார்கள். மக்கள் என் மீது வைத்த நம்பிக்கையை ஒரு காலமும் நான் வீண் போக வைக்கவில்லை. எவ்வளவு எதிர்ப்பு அரசியல் வந்தாலும் கூட அதை நான் மாற்றப் போவதுமில்லை. எனவே யார் சரியான விடயத்தைச் செய்கின்றார்கள் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொள்ள வேண்டும்.

அரசியல் சந்தர்ப்பவாதிகளை நீங்கள் இணங்காண வேண்டும். அதைப் பற்றி நாங்கள் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டியது மிக மிக அவசியமாகிறது. எனவே இந்த நாட்டில் இருக்கக்கூடிய எல்லா அரசியல் தலைவர்களும் நாட்டின் மீது அன்பு செலுத்திச் செயற்பட வேண்டும். தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் எங்களுக்குத் தேவையில்லை. நாளைய தினத்தில் நாடு எந்தளவுக்கு முன்னேறிச் செல்லவேண்டும் என்பது தான் முக்கியமான பிரச்சினை. அதைத் தான் நாங்கள் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

எனவே, நீங்களும் நாங்களும் என எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த நாட்டிற்காக எங்களுடைய கடமைகளைச் செய்வோம். இனங்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவோம். அதற்காக நாங்கள் எல்லோரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோம். – என்றார். (ஐ–7)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்தவர் கொழும்பு – தெமட்டகொடைப் பகுதியைச் சேர்ந்த அன்னிராஜ் (வயது42) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் உயிரிழந்தவரின் மனைவி ஆவார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அருகிலுள்ள சி.சி.ரி.வி. கமெரா பதிவை வைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபரின் மோட்டார் சைக்கிளையும் அதன் இலக்கத்தையும் அடையாளம் கண்டுள்ளனர்.

இதன்படி கறுப்பு நிற மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவரே சிவப்பு நிறக் காரில் வந்த இருவர்மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் சட்டவிரோத ஹெரோயின் விற்பனை எனப் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை மற்றும் ஆமர் வீதி பொலிஸார் இணைந்து மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## ரயிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்த செல்லையா கந்தசாமி (வயது – 73) என்ற முதியவரே உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயிலிலேயே இவர் மோதுண்டு உயிரிழந்துள்ளார். (ஐ–7)

# இலங்கை அபிவிருத்தி நடவடிக்கைக்கு கொரிய 'எக்ஸிம்' வங்கி நிதி உதவி!

கொழும்பு, மார்ச் 20
இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கொரியா 785.07 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது என கொரிய 'எக்ஸிம்' வங்கியின் இலங்கைக்கான பிரதம வதவிட பிரதிநிதி சங்கு ஜங் தெரிவித்துள்ளார்.

கொரியாவினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட உள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொரிய மற்றும் இலங்கை அரசுகளுக்கு இடையிலான புரிந்துணர்வின் அடிப்படையில் ஏற்கனவே கொரிய அரச மற்றும் தனியார் நிறுவனங் களின் உதவியுடன் இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், கொரியாவின் 'எக்ஸிம்' வங்கியானது இலங்கையில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென 785.07 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதியில் 385 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் போக்குவரத்து துறைசார் அபிவிருத்தி நடவடிக்கைகளும், 205 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நீர் வழங்கல் மற்றும் கழிவு முகாமைத்துவ அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.



கொரிய நிதி மற்றும் மூலோபாய அமைச்சின் கீழ் இயங்கும் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் ஊடாக அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை அரசுக்குத் தேவையான கடன்களை வழங்குதல் மற்றும் இலங்கையின் சர்வதேச வர்த்தக, முதலீட்டு நடவடிக்கைகளுக்கான நிதி ரீதியான வழங்குநராக தொழிற்படல் ஆகிய இரு பிரதான தொழிற்பாட்டு நடவடிக்கைகளை கொரிய எக்ஸிம் வங்கி மேற்கொள்ளவுள்ளது.

கொரிய மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையிலான மூலோபாய புரிந்துணர்வு கட்டமைப்பு மூலம் இனங்காணப்பட்ட துறைகளான கல்வி, போக்குவரத்து, நீர் வழங்கல் முகாமைத்துவம், கழிவு முகாமைத்துவம் மற்றும் பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்தி என்பன தொடர்பில் பிரதான கவனம் செலுத்தப்படவுள்ளது. மேற்குறித்த ஒழுங்கின்படி கொரிய நிதி மூலம் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கொரிய 'எக்ஸிம்' வங்கியானது பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் ஊடாக கொழும்பு - காலி வீதி அபிவிருத்திக்காக 1990 இல் முதன்முதலில் நிதி ஒதுக்கீடு செய்தது.

அதன் தொடர்ச்சியாக தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள 29 அபிவிருத்தி திட்டங்களுக்காக 785.07 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நிதியுதவி வழங்குவதற்கு தகுதியடைந்த 54 நாடுகளில் இலங்கை 5 ஆவது இடத்தில் உள்ளது.

அத்தோடு, 1978 ஆம் ஆண்டிலிருந்து 386 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி இலங்கை மற்றும் கொரிய நாடுகளுக்கிடையிலான வர்த்தக, முதலீட்டு நடவடிக்கைகளுக்காக கொரிய 'எக்ஸிம்' வங்கியினால் ஒதுக்கப்பட்டு வந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை மற்றும் கொரியாவிற்கு இடையிலான மூலோபாய தொடர்புகளின் 40 ஆவது வருட நிறைவையொட்டி கொரியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, கொரிய பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தால் வழங்கப்படும் நிதியினை 2017 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் 300 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 500 மில்லி யன் அமெரிக்க டொலராக அதிகரிப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கடற்றொழிலாளர் பற்றிய முறையான தொகை மதிப்பீடு

### இந்த வருடத்தில் நடக்கும்

கொழும்பு, மார்ச் 20
கடற்றொழிலாளர் பற்றிய முறையான தொகை மதிப்பு இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான ஆலோசனையை கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் மஹிந்த அமரவீர கடற்றொழில் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

இலங்கையில் முதல் தடவையாக 1976 ஆம் ஆண்டில் மீனவர்கள் தொடர்பான தொகை மதிப்பு மேற்கொள்ளப்பட்டது என்றும், அதன் பின்னர் 42 வருடங்களாக தொகை மதிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சரியான தரவுகளைத் திரட்ட தொகை மதிப்பை மேற்கொள்வது அவசியமாகும். கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் விவரம் குடும்ப வருமானம், வாழ்க்கைத்தரம் போன்றவற்றை அறிந்து கொள்ள இது உதவும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சனத் நிஷாந்த எம்.பி. விளக்கமறியலில்!

கொழும்பு, மார்ச் 20
புத்தளம் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த பெரேரா மற்றும் அவரது சகோதரரான ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஜகத் சமந்த பெரேரா ஆகியோரை எதிர் வரும் மே மாதம் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் மேல்நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை செயலாளர் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த பெரேரா மற்றும் அவரது சகோதரருக்கு எதிராக சிலாபம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் பிணை வழங்கும் போது, வாரத்தின் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சிலாபம் பொலிஸ் நிலையத்திற்கு சமுகமளித்து கையொப்பமிட வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

எனினும், 2017 ஒகஸ்ட் மாதத்திலிருந்து பொலிஸ் நிலையத்திற்கு இவர்கள் சமுகமளிக்கவில்லை என இவர்கள் இருவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தெல்தெனிய வன்முறை; 8 பேர் விடுதலை

கொழும்பு, மார்ச் 20
தெல்தெனியவில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட 24 பேரில் 8 பேரை விடுதலை செய்ய தெல்தெனிய நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் ஏனைய 16 பேரையும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## முஸ்லிம்களுக்கு தலைமைத்துவம் இல்லை; பிரச்சினைகளுக்கு இது ஒன்றே காரணம்

### என்கிறார் சம்பிக்க





கொழும்பு, மார்ச் 20
முஸ்லிம் சமூகத்திற்கு அரசியல் ரீதியிலும் சமய ரீதியிலும் கூட்டுத்தலைமைத்துவமும் சரியான வழிகாட்டல் இன்மையுமே அந்தச் சமூகம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ளது என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் மாநகர மற்றும்மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கிறிஸ்தவ சமூகத்தை பேராயர் கார்தினால் சரியாக வழிநடத்துவது போன்று முஸ்லிம் சமூகத்தையும் வழிநடத்த முஸ்லிம் சமயத்தலைவர்கள் முன்வர வேண்டும் என்றும் முஸ்லிம் சிவில் அமைப்பு பிரதிநிதிகளிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் அழைப்பின் பேரில் முஸ்லிம் கவுன்சில் தலைவர் என். எம். அமீன் தலைமையில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா உட்பட முஸ்லிம் அமைப்புக்க ளின் பிரதிநிதிகளுக்கும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

கொழும்பு 7 இல் உள்ள அமைச்சரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் சம்பிக்க மேலும் குறிப்பிட்டவை வருமாறு :-

கிறிஸ்தவர்கள் மத்தியில் சமூக ரீதியிலோ அல்லது தேசிய ரீதியிலோ ஏதாவதொரு பிரச்சினை எழுகின்றபோது அதனை வளரவிடாமல் அதில் தலையீடு செய்து அவற்றைக் கட்டுப்படுத்தி அவற்றுக்கு உரிய அல்லது நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் பேராயர் கார்தினால் சரியான தலைமைத்துவத்தை கொடுத்து வருகின்றமையை காண முடிகின்றது.

இது போன்ற தலைமைத்துவத்தை முஸ்லிம் மதத்தலைவர்களும் சரியான நேரத்தில் வழங்குவாராயின் அநேகமான பிரச்சினைக்கு தீர்வைக் கண்டிருக்க முடியும்.

அம்பாறை மற்றும் கண்டி, திகண ஆகிய பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற அழிவுக்கு பொய்யான பிரசாரங்களும், சரியான தெளிவின்மையே பிரதான காரணமாகும். இந்தச் சம்பவத்தின் ஆரம்ப கட்டங்களிலேயே உரிய நடவடிக்கையை மேற்கொள்ள அரச இயந்திரம் தவறிவிட்டது.

ஆர்ப்பாட்டங்கள் செய்வதற்கு அனுமதி உண்டு மாறாக ஆர்ப்பாட்டம் என்ற பேரில் வன்முறையில் ஈடுபடுவதையோ, தீவைத்து மற்றவர்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதையோ ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

எனவே, இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சரியான முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதிலும் சட்டமும் ஒழுங்கும் சரியான முறையில் நிலைநாட்டப்படவேண்டும் என்பதிலும் நான் உறுதியாக உள்ளேன். இது தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சருடனான இந்த சந்திப்பில் ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான நிஷாந்த ஸ்ரீ வர்ண சிங்ஹ, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் இளைஞர் அமைப்பின் பொறுப்பாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூர் ஆமித், முஸ்லிம் கவுன்சிலின் உப தலைவர் ஹில்மி அஹமட், ஸ்ரீலங்கா ஜமாஅதே இஸ்லாமியின் செயலாளர் சட்டத்தரணி எஸ். பாரிஸ், தேசிய ஐக்கிய முன்னணியின் தலை வர் அஸாத் சாலி, அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தேசியத் தலைவர் எம். என். எம். நபீல், ஓய்வு பெற்ற கேர்ணல் பைசர் ரஹ்மான், டாக்டர் மூசீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயலாளர் ஸாதிக் ஷிஹான், உப தலைவர் எம். ஏ. எம். நிலாம், தொழிலதிபர் ஷிப்லி விலா காசிம் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஏமாற்றினார் மைத்திரி

## அருட்தந்தை சக்திவேல் சாடல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். வந்த ஜனாதிபதி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்திப்பதாக அழைத்து ஏமாற்றிவிட்டார் எனக் குற்றஞ்சாட்டியுள்ள அருட்தந்தை மா.சக்திவேல், ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடு ஒட்டுமொத்த தமிழரையும் அவமானப்படுத்தும் செயல் என்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழில் நுட்பஆய்வு கூடத்தைத் திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று யாழ்ப்பாணம் வந்தார். இதன்போது காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது உறவுகளை மீட்டுத் தரக்கோரி ஜனாதிபதி கலந்து கொள்ளும் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அந்த வீதி வழியாகப் போராட்டக்காரர்களைப் பார்த்துக் கொண்டு சென்ற ஜனாதிபதி, போராட்டக்காரர்களில் மூவரைப் பேச்சுக்கு வருமாறு அழைத்திருந்தார். அதற்கமைய அருட்தந்தை சக்திவேல் தலைமையில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மூவரை ஜனாதிபதி கலந்து கொள்ளும் நிகழ்வு நடைபெறும் இடத்துக்குப் பொலிஸார் அழைத்துச் சென்றிருந்தனர்.



இந்த நிகழ்வு முடிவடைந்த பின்னர் அவர்களை ஜனாதிபதி சந்திப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் நிகழ்வு முடிவடைந்தும் ஜனாதிபதி தம்மைச் சந்திக்காது ஏமாற்றிவிட்டார் எனச் சந்திப்பதற்குச் சென்றிருந்த அருட்தந்தை சக்திவேல் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

எம்மைச் சந்திக்க வருமாறு கூறிவிட்டு இறுதியில் எம்மைச் சந்திக்காமல் ஏமாற்றித் திருப்பியனுப்பி இருக்கின்றார் ஜனாதிபதி. ஜனாதிபதியின் இத்தகைய அவமானப்படுத்தும் செயற்பாடானது எம் மூவரை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் அவமானப்படுத்தும் செயல்.

நாங்கள் வீதியில் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கையில் ஜனாதிபதி கலந்து கொள்ளும் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், வடக்கு முதலமைச்சர் மற்றும் தமிழரசுக் கட்சியின் தலைவர் உள்ளிட்ட தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தபோதும், யாருமே எமது போராட்டம் தொடர்பில் ஜனாதிபதி முன்னிலையில் பேசவில்லை. அத்தோடு அவர்களும் எமது போராட்டத்தைக் கண்டுகொள்ளாது சென்றுள்ளனர் – என்றார்.

(ஐ –7)













இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.